Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04. திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 01 ஞாயிற்றுக்கிழமை (17.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 048

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)



# சுயாதீன விசாரணையை வலியுறுத்துகிறார் கமரூன்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க் கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் சுயாதீன விசாரணையொன்றை நடத்தவேண்டும். தவறின் இது தொடர்பாக சர்வதேச விசாரணையை நடத்து [illegible] ஐ.நா.விடம் கோரப்படு[illegible] பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலுள்ள ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கமரூன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேசுகையில் சுயாதீன விசாரணை குறித்து வலியுறுத்தினேன்.

பெருந்தன்மையாக நடந்து கொள்வதன் மூலமாகத்தான் நாட்டில் நல்லிணக்கத்தை உருவாக்க முடியும்.

ஜனாதிபதி மகிந்தவுடனான எனது சந்திப்பில் கடுமையான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. எனினும் இந்தச் சந்திப்பு தேவையானது, பெறுமதியானதுதான். எனினும் நான் கூறிய அனைத்தையும் ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.

வடக்கு நிலைமைகள் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உள்நாட்டுப் போர் நிறைவின் பின்னர் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் வரவேற்கப்பட வேண்டியது.

குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டமை மிகச் சாதகமான ஓர் முன்நகர்வு.

வடமாகாணசபைக்கு அதிகாரங்களை பகிர்வது தொடர்பிலும் அரசாங்கம் கவனம் செலுத்த

19 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணையை நிராகரித்தார் ஜனாதிபதி

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

கண்ணாடி மாளிகைக்குள் இருந்துகொண்டு எவரும் கல் எறியக்கூடாது என்றும் அவர் கூறினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார். ஜனாதிபதி இங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்-

எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், இல்லையெனில் சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் பிரித்தானிய பிரதமர்




டேவிட் கமரூன் கூறியது அவரது சொந்தக் கருத்து. இது ஜனநாயக நாடு என்பதால் எவருக்கும் எந்தக் கருத்தைத் தெரிவிக்கவும் நாம் களம் அமைத்துக்

19 ஆம் பக்கம் பார்க்க

# தமிழரின் செயற்பாடுகளை சிதைக்கிறது கூட்டமைப்பு

## குற்றம்சுமத்துகிறார் கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களின் செயற்பாடுகளை சிதைத்து வருவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

[illegible]ாழ். ஊடக அமையத்தில் [illegible]று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ். நூல்நிலையப் பகுதியில் காணாமற்போனவர்களின்




உறவுகள் நேற்று முன்தினம் மேற்கொண்ட போராட்டத்தினை பிரித்தானியப் பிரதமர் டேவிட்

19 ஆம் பக்கம் பார்க்க

# வரலாற்று உண்மையை புரிந்து தமிழர் பிரச்சினையை அணுகவேண்டும்

## பிரிட்டன் வெளியுறவு அமைச்சரிடம் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் உரிமைப்பிரச்சனைக்கு நிரந்தரமானதும், கௌரவமானதுமான தீர்வு காணப்படவேண்டும். அதற்காக கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்திக் கொள்வதற்கு எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் எடுத்துள்ளது. எமக்கு கிடைத்த மக்கள் ஆணைக்கு அமையவே எமது முயற்சிகளின் வலிமையும் அமைந்திருக்கின்றது.

எனவே சர்வதேச சமூகம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை வரலாற்று அனுபவங்களுடன் அணுகவேண்டும் என நேற்று முன்தினம் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சரையும், அவரது செயலாளரையும் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மேற்படி சந்திப்பின்போது அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க



# மாற்றங்களை ஏற்படுத்த இணைந்து செயற்படவேண்டும்

## சொல்கிறார் குர்ஷித்

(கொழும்பு)

இலங்கையுடன் இணைந்து செயற்படுவதன் மூலமே தேவையான மாற்றங்களை ஏற்ப்டுத்த முடியும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்காக இலங்கை வந்துள்ள இந்தியக் குழுவினருக்கு தலைமை வகிக்கின்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித், செய்தியாளரின் கேள்விகளுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# உருளைக்கிழங்கு, வெங்காயம் இறக்குமதி வரி குறைப்பு

(கொழும்பு)

இன்று முதல் அமுலுக்குவரும் வகையில் உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் ஆகியவற்றின் இறக்குமதி வரி குறைக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய உருளைக்கிழங்கு மீது விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி வரி 40 ரூபாவில் இருந்து 30 ரூபா குறைக்கப்பட்டுள்ளதுடன் பெரிய வெங்காயம் மீதான வரி 35 ரூபாவிலிருந்து

19 ஆம் பக்கம் பார்க்க

03



திருநாள்

08



பிரியாவிடை

11



விலையை...

## பொதுநலவாயம் என்பது சர்வதேச பொலிஸ் அல்ல

(கொழும்பு)

பொதுநலவாயம் என்பது சர்வதேச பொலிஸ் அல்ல என அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கு எதிரான எந்தவொரு சர்வதேச விசாரணையையும் அரசாங்கம் எதிர்க்கும் எனவும் மிகவும் தெளிவாக அரசாங்கம் சர்வதேசத்திற்கு பதில் அளித்துள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற அவைத் தலைவரும் அமைச்சருமான நிமல் சிறிபாலடி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# இலங்கை மீதான குற்றச்சாட்டு; உள்நாட்டு விசாரணை நடத்தப்படும்

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக அரசாங்கம் உரிய உள்நாட்டு விசாரணையை மேற்கொள்ளுமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

சனல் - 4 ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை உள்நாட்டு வரைமுறைகளுக்கு அமைய விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.

இது எந்த அழுத்தங்களின் அடிப்படையிலும் இடம்பெறவில்லை.

அதேநேரம் இந்த விசாரணைகள் எந்த வகையில் மேற்கொள்ளப்படும் என்பதை அரசாங்கமே தீர்மானிக்கும்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனை அரசாங்கம் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கே அழைத்தது எனவும் அவர் தனது கௌவரத்தை தற்காத்து கொண்டு இருக்க வேண்டும்

பிரித்தானிய பிரதமரை அரசாங்கம் பொதுநலவாய நாடுகளின்

19 ஆம் பக்கம் பார்க்க

# வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

ஏழாலை மயிலங்காட்டுப்பகுதியில் கடந்த செவ்வாய் இரவு வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது

மயிலங்காடு -புன்னாலைக்கட்டுவன் வீதியில் ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலைக்கருகில் உள்ள தனியார் அழகு சாதனப் பொருள் விற்பனை நிலையமே இவ்வாறு உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான அழகுசாதனப் பொருட்கள் திருடப் பட்டுள்ளன. (66)


வாழ்க வளமுடன்

தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஜெ. யுனிற்ரா

முகவரி : அராலி கிழக்கு, அம்மன் கோவிலடி.

அகவை 8 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : வே. அஷ்வினி

முகவரி : கல்வயல், சாவகச்சேரி.

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்





வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்


# மத்திய கல்லூரியில் தொழிற்சந்தை

# வேலைவாய்ப்பு திணைக்களம் ஏற்பாடு




(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொழிற் சந்தை ஒன்று நேற்று யாழ். மத்திய கல்லூரியில் மனித வலு வேலை வாய்ப்புத்திணைக் களத்தினால் நடாத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை நடைபெற்ற இந்த தொழிற்சந் தையை யாழ். அரச அதிபர் சுந் தரம் அருமைநாயகம் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தது டன் இந்நிகழ்வில் யாழ். மேல திக அரச அதிபர் ரூபினிவரத லிங்கம் மற்றும் யாழ். செயலக அதிகாரிகளும் கலந்து கொண்ட னர்.

இந்தத் தொழிற்சந்தையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பெருமளவு நிறுவனங்கள் தமது ஊழியர்களுடன் பிரிவுகளை நிறுவி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக் கான பல்வேறு தொழில்வழி காட்டி நிகழ்வுகளை நடாத்தியது டன் அது குறித்த விபரங்களை யும் வழங்கினர்.

இந்த தொழிற்சந்தையில் பெருமளவு இளைஞர், யுவதிகள பங்கு பற்றி பயனடைந்ததினை அவதானிக்கமுடிந்தது. (பா)

## பரிசளிப்பு விழா

கரவெட்டி கட்டைவேலி யார்க் கருவிநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடை பெறவுள்ளது

இந்நிகழ்வு பாடசாலையின் அதிபர் திருமதி தவமலர் ஜெயக்குமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வின் பிரதம விருந்தினராக தொழில் அதிபர், சமாதான நீதவான், சமூகச்சுடர் நடேசு பாஸ்கரன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐயாத்துரை செல்வராஜா கலந்து கொள்கின்றனர். இந் நிகழ்வில் திருமதி இந்திராணி பாஸ்கரன் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி கௌரவிக கவுள்ளார்.

## சிவில் சமூக அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளையின் சிவில் சமூக அமைப்புக்களுடனான ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக் கிழமை நடை பெறவுள்ளது.

கிறீன் கிறாஸ் விருந்தகத்தில் காலை 10 மணிமுதல் மாலை 3 மணிவரை இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நடைபெறவுள் ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சிவில் சமூக பிரதிநிதிகளிடையே சிறந்த ஒரு வலைப்பின்ன[illegible] இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்படுத்த பல்வேறு ஒருங்கிணைப்பு நிகழ்வுகளை நடாத்திவருகின்றமை குறிப் பிடத்தக்கது. (இ)

## தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை முருகன் கோயில் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலை முருகன் கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 9.45 மணிவரை நடைபெறவுள்ளது.

இதனைமுன்னிட்டு முதல் நாள் வியாழக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு காலை 7.00 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை நடைபெறவுள்ளதாக ஆலயத்தின் பரிபாலகர் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த கும்பாபிஷேக நிகழ்வு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் ஆலய பரிபாலகர்சபையினர் மே[illegible] தெரிவித்துள்ளனர். (பா)


# நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 205 | திகதி 2013.11.15 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள் | ஆங்கில எழுத்து

13 19 43 52 A

பரிசுத் தொகை ரூபா. 11,801,260/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | - | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 209 | 209,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 340 | 340,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9209 | 552,540/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4872 | 194,880/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 120264 | 2,405,280/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 17544 | 350,880/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 11,801,260/- | | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,352,580/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 12,036,700/-

2013.11.19ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.

தொ.பே: 011 2333546/47

(C/3186)

web : www.dlb.lk


## உரிமை கோரப்படாத பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் உரிமை கோரப்படாததும் பறிமுதல் செய்யப்பட்டதுமான பொருட்கள் எதிர் வரும் 07.12.2013 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப் படும்.

காப்பு, சங்கிலி, பென்ரன், துவிச்சக் கர வண்டி, (ஆண், பெண்) உடைந்த நிலையிலான துவிச்சக்கர வண்டிகளும், நீர் இறைக்கும் மோட்டார்கள், அல வாங்கு, சுத்தியல், ஒட்சிசன் சிலிண்டர் ஆகிய பொருட்களுக்கு ஏல விற்பனை நடைபெறும்.

இப்பொருட்களை ஏல விற்பனை தினத்தன்று அரை மணித்தியாலயத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.

ஏலத்தில் எடுக்கப்பட்ட பொருட்களு க்கு உடன் பணத்தைச் செலுத்தி பொருட் களை நீதிமன்ற வளாகத்திலிருந்து அப் புறப்படுத்தல் வேண்டுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (105)

## பௌர்ணமி உற்சவம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் பூரணா புட்கலா சமேத ஹரிகர புத்திர ஐயனார் ஆலய பௌர்ணமி உற்சவம் இன்று இடம்பெறவுள்ளது.

காலை 10மணிக்கு நவகும்பபூசை இடம்பெற்று விசேட திரவிய அபிசேகம் இடம்பெறுவதுடன் விசேட வசந்தமண்டப பூசை நடைபெற்று பூரணா புட்கலா சமோதராய் ஐயப்பன் உள்வீதி உலாவும் இடம்பெறவுள்ளது.

இவ்வுற்சவம் ஆலயதர்மகர்த்தா சு. சிவானந்தன் ஐயா தலைமையில் இடம் பெறுவதுடன் வழமைபோல அடியார் களுக்கு அன்னதான நிகழ்வும் இடம் பெறவுள்ளது. (இ)

## மைதானத்தில் வாள்வெட்டு சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

நெல்லியடி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற வாள் வெட் டுச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாள் வெட்டுச் சம்பவம் தொடர் பில் ஐவரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியதோடு மேலும் நால்வர் நீதிமன்றில் ஆஜராகி யிருந்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் கரவெட்டி அத்தாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணையின்போது தெரியவந்துள் ளது. (18)

# கொழும்பை அலங்கரிக்க 1500 மில்லியன் ரூபா செலவு

## மாநகர முதல்வர் தகவல்

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை முன்னிட்டு கொழும்பு நகரை அலங்காரப்படுத்த கொழும்பு மாநகர சபை ஆயிரத்து 500 மில்லியன் ரூபாவை செலவிட நேரிட்டதாக கொழும்பு மாநகர முதல்வர் ஏ.ஜே.எம். முஸாமில் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரின் வீதிகளை புனரமைத்தல், நடைபாதைகளை அமைத்தல், அலங்கார செடிகளை வைத்தல், பேருந்து தரிப்பிடங்களை நிர்மாணித்தல் மற்றும் மின் விளக்குகளைப் பொருத்துதல் உட்படப் பல பணிகளுக்காக இந்தப் பணத்தை மாநகர சபை செலவிட்டது.

பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு கொழும்பு நகரை புனரமைப்பதன் மூலம் பொருளாதாரம் உயரும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும்.

இதனால் செலவிடப்பட்ட பணம் ஒரு முதலீடாகும். இந்த வேலைகளை ஆரம்பிக்கும் போது தாமதம் ஆகிறது. செய்து முடிக்க முடியாது போகும் என்று கூறினார்கள். இன்று தரம் எப்படி என்று கேட்கின்றனர் என்றார்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு தலைமையகத்தில் தீபாவளி விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாதுகாப்பு தலைமை அலுவலகத்தால் தீபாவளி விழா கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மக்கள் வங்கி தலைமை அலுவலகத்திற்கு அருகாமையிலுள்ள ஒத்துழைப்பு மத்திய நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

பாதுகாப்பு படைகளின் மாவட்டத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேரா தலைமையில் நடந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன், கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர் கே.முருகவேல் , ஏனைய அரச உயரதிகாரிகள், அதிகாரிகள் சர்வ மதகுருமார், பொது மக்கள் , பாதுகாப்பு படை வீரர்கள் என நூற்றுக் கணக்கானோர் கலந்து கொணடனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் நுண்கலைப் பீட மாணவர்கள் கண்ணுக்கினிய கலை விருந்தினை அளித்தார்கள். (90)

# காசோலைகளைப் பெறவும்

(ஆனைக்கோட்டை)

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் சுயதொழிலைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த ஐந்து பேருக்கு யுனிசெப் நிறுவனத்தால் கொடுப்பனவுக்கான காசோலைகள் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பின்வரும் பெயர், முகவரியுடையவர்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் ஏ.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

இதற்கமைய வி.கவிதா (மில்லடி சுழிபுரம் கிழக்கு), க.சுகிர்தாஜினி (நிச்சாமம், சங்கானை), ந.சகுந்தலாதேவி (பொன்னாலை மேற்கு), ம.அதீஸ்குமாரி (நிச்சாமம் சங்கானை), பு.கோமளா (தொல்புரம் கிழக்கு), ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (104)

# வீதிகள் அகலிப்பு குறித்து மக்களுக்கு விழிப்பூட்டல்



வீதிகள் அகலிப்பது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக வேலணை பிரதேசசபை தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளருமாகிய சின்னையா சிவராசா நயினாதீவில் அம்பிகா சனசமூக நிலையத்தில் மக்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் வேலணை பிரதேச சபைக்கு வடக்கின் வசந்தம் விசேட திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபாவில் நயினாதீவு கேணிக்குழி வ்தி புனரமைக்கப்படவுள்ள நிலையில் வீதி அகலிப்பது தொடர்பாக வேலணை பிரதேச சபை உப அலுவலகப் பொறுப்பதிகாரி மோகனரூபனால் ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்துரையாடலில் மக்களுக்கு விளக்கத்தினை பிரதேச சபை தவிசாளர் வழங்கினார்.

# சாதாரண தர மாணவர்களுக்கு இலவச கல்விக் கருத்தரங்கு

க.பொத சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவச கல்விக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் 2 ஆவது கருத்தரஙகு இளவாலை ஹென்றியரசர் கல்லூரியில் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அதிபர் வண.ஜேசுதாசன் அடிகளார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக சுன்னாகம் றோட்டரிக் கழகத் தலைவர் ஸ்ரீரங்கநாயகியும் கௌரவ விருந்தினராக தேசிய இளைஞர் கழக சம்மேளன உப தலைவர் எஸ்.விஜிதரனும் கலந்து கொள்வார்.

இதில் ஞாயிற்றுக்கிழமை கணித பாடத்திற்கான செயலமர்வும் திங்கட்கிழமை விஞ்ஞான பாடத்திற்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளது.

# புனரமைக்கப்படாத பூதன்வயல் மயான வீதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பூதன்வயல் கிராமத்திலுள்ள மயான வீதி நீண்டகாலமாக எவ்வித புனரமைப்புமின்றி மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது.


இவ்வீதியைப் புனரமைத்து தருமாறு உரிய அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டும். இதுவரை இவ்வீதி புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இக்கிராமத்தில் 175 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் இவ்வீதி சேதமடைந்துள்ளதால் இதனூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் மற்றும் தகனக்கிரியைகளுக்காக மயானத்திற்குச் செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் இவ் வீதியை தற்காலிகமாகவேணும் புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (125)



**முள்ளியவளை பொலிஸ் பிரிவின் சிறுவர் பெண்களுக்கான புதிய பிரிவின் கட்டடத்தை முல்லைமாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சேனாதீர திறந்து வைப்பதைக் காணலாம். (125)**



"கார்த்திகை விளக்கீடு" என்று சொல்லப்படுகின்ற திருக்கார்த்திகை திருநாள் இன்றாகும். ஒவ்வொரு மாதத்திலும் கார்த்திகை வந்தாலும் கார்த்திகை மாதத்திலே வருகின்ற கார்த்திகை நட்சத்திர நாள்தான் "திருக்கார்த்திகை" என அழைக்கப்படுகின்றது.

இன்றைய திருக்கார்த்திகை விழாவானது சர்வாலயதீபம், குமாராலயதீபம் என்று இரு தீபத்திருநாளும் ஒன்றாகவே இணைந்து வருவது ஒரு தனிச்சிறப்பாகும். "சர்வாலய தீபம்" என்று கூறப்படுவது எல்லாக்கோயில்களிலும் வீடுகளிலும் சமய நிறுவனங்களிலும் தொழில் ஸ்தாபனங்களிலும் பொது இடங்களிலும் தீபங்களை ஏற்றி வைத்து வணங்குகின்ற சிறப்பான விழாவாகும்.

குமாராலய தீபம் எனப்படுவது முருகன் கோயில்களில் மட்டும் தீபமேற்றி வழிபடும் விழாவாகும். விஷ்ணுவாலய தீபம் என்று சொல்லப்படுவது திருமாள் கோயில்களில் அதாவது பெருமாள் கோயிலில் மட்டும் தீபமேற்றி வழிபடுவதைக் குறிக்கும்.

இன்றைய இந்தத் திருக்கார்த்திகைத் தீப நன்னாளில் கோயில்களில், "சொக்கப் பானை" என்று ஒரு விழா நடக்கும். அதாவது ஓலைகளாலும் தடிதண்டுகளாலும் ஒரு பெரிய பொதியைக் கட்டி ஆலய வாயிலில் வைத்துத் தீயிட்டுக் கொளுத்துவார்கள்.

அப்போது மூலஸ்தான மூர்த்திக்கும் எழுந்தருளி மூர்த்திக்கும் பஞ்சாராத்தி காட்டி விசேஷ தீபாராதனை நடைபெறும். அடியார்கள் சோதியாக எழுந்து வானளாவ எரியும் தீச்சுவாலையை "அரோஹரா" கோஷத்துடன் வழிபாடியற்றுவார்கள். இதுவே சொக்கப்பானை கொளுத்தும் நிகழ்வு "சொக்கப் பாவனை" என்பதே சொக்கபானை என மருவிற்று என்பாருமுளர்.

இன்றைய கார்த்திகை விளக்கீட்டு நனனாளில் முருகப் பெருமானது ஆலயங்களில் மாவிளக்குப் போடுவார்கள். தேன், தினைமா, சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து பிசைந்து மாப்போல ஆக்கி அதிலே திருவிளக்குச் செய்து, நெய்விட்டுத் திரிபோட்டுத் தீபமேற்றுவார்கள்.

அடியார்கள் அந்தத் தீபத்திலே ஆண்டவனைக் கண்டு வழிபட்டு வணங்கிவிட்டு அந்த மாவிளக்கைச் சுற்றத்தவர்க்கும் மற்ற அடியார் பெரு மககளுக்கும் கொடுத்து உண்டு மகிழ்வர்.

ஆதலால், இன்றைய திருக் கார்த்திகைத் தீப நன்னாளில் எமது இல்லங்களில் விளக்கேற்றி வழிபாடியற்றி இனிமேலாவது எம் துன்பதுயரங்கள் விலகி நல்வாழ்வு மலர்ந்து எங்களுடைய வாழ்ககை ஒளிவீசிப் பிரகாசிக்க வழி கிடைக்க வேண்டும் என்று இறையருளைச் சிந்தித்து சேவித்து நிற்போமாக.

கலாபூஷணம்
இராசையா ஸ்ரீதரன்

# இரு நூல்களின் விமர்சன அரங்கு

வடமராட்சியைக் களமாகக் கொண்டு இயங்கும் உயில் கலை இலக்கிய சங்கத்தின் ஏற்பாட்டில் லண்டன் எழுநா வெளியீட்டகத்தின் இரண்டு நூல்களுக்கான விமர்சன அரங்கு கடநத 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9.30 மணிக்கு யா/வதிரிவடக்கு மெ.மி.த.க பாடசாலை மண்டபத்தில் எழுத்தாளர் அநாதரட்சகன் (மு.இராசநாயகம்) தலைமையில் இடம் பெற்றது.

நிகழ்வில் பரஞ்சோதி தங்கேஸ் எழுதிய "யாழ்ப்பாணத் தமிழர் கலாசாரததில் சாதியமும் இனத்துவமும்" என்ற நூல் பற்றிய விமர்சன உரைகளை தெணியான் (செ.நடேசன்), ஏ.சீ.ஜோர்ச் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து அ. கௌரிகாந்தன் எழுதிய "யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலாநந்தரும்" எனற நூலுக்கான விமர்சன உரைகளை இ.இராஜேஸ்கண்ணன் (விரிவுரையாளர், சமூகவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்), சி.ரமேஸ் (ஆசிரியர்) ஆகியோர் நிகழ்ததினர். நிறைவுரையை சு. குணேஸ்வரன் (ஆசிரியர், யா,தொண்டைமானாறு வீ.ம.வித்) நிகழ்த்தினார். நூல்களின் அறிமுகப் பிரதிகளை முறையே க.தணிகாசலம் வழங்க எஸ்கே. இராஜேந்திரனும், ஜி.ரி.கேதாரநாதன் வழங்க உடுவில் அரவிந்தனும் பெற்றுக்கொண்டனர். (90)

அச்சத்தை நீக்கும் வரை மனிதன் எதையும் சாதிக்க முடியாது. - தோமஸ் கார்லைல்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## உண்மையைச் சொல்லாதது ஏன்?

இந்தியாவில் இந்திரா காந்தி காலத்தில் பிறப்பிக்கப்பட்ட நெருக்கடிநிலைப் பிரகடனத்தின் நினைவு நாளையொட்டி நடைபெற்ற ஜனநாயகப் பாதுகாப்புக் கூட்டத்தில் எழுத்தாளரும் மனிதஉரிமைகள் ஆர்வலருமான அருந்ததி ராய் உரையாற்றிய போது இதைச் சொன்னார்:

"நாம் வாழ்வது தணிக்கை யுகத்திலல்ல; செய்திகள் உற்பத்தி செய்யப்படும் காலகட்டத்தில். நாமிருப்பது ஒரு பைத்தியக்கார விடுதியில் என்று தோன்றுகிறது. அங்குள்ள நோயாளிகளைப் போலத்தான் நாம் ஒவ்வொருவரும் நடத்தப்படுகிறோம்."

நாம் கண்ணால் கண்ட சம்பவங்கள் ஒன்றாகவும், அடுத்த நாள் ஊடகங்களில் வரும்போது அதுவே, வேறொரு செய்தியாகவும் உருமாறியிருப்பதைக் காணும்போது, மேற்படி அருந்ததி ராய் சொன்னதைத்தான் நினைக்கத் தோன்றுகிறது. பெரும்பாலான தமிழ் ஊடகங்களும் அப்படித்தான் நம்மை நடத்துகின்றன.

இங்கிலாந்துப் பிரதமர் டேவிட் கமரூனின் யாழ்ப்பாண வருகையின் போது, அவரிடம் மகஜர் கொடுப்பதற்காக குழுமியிருந்த மக்களை ஏமாற வைத்ததும், அவர்கள் தடுப்புகளை உடைத்துக்கொண்டு ஆவேசமுடன் திட்டித் தீர்க்கவும் காரணமாயிருந்தவர்கள் யாரென்பதை தமிழ் ஊடகங்கள் பேசாப் பொருளாக்கி விட்டன.

கமரூனும் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனும் மற்றும் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரும் பேசியபடியே பொது நூல்நிலைய பால்கனியில் மக்களுக்குக் காட்சி தந்தனர். வெளியே மகஜரை அளிப்பதற்காகக் கூடிநின்ற மக்களை அவர்களும் பார்வையிட்டனர்.

அது தெரிந்தும் அவர்கள் ஏன் இறங்கிவந்து மக்களைச் சந்திக்க முயலவில்லை என்பதை இந்த ஊடகங்கள் ஒரு கேள்வியாகக் கூட கேட்கவில்லை. மக்களை நேர்கொண்டு சந்திப்பதைத் தவிர்த்துக்கொண்டு தப்பியோடவே முயற்சித்தார்கள். அதற்குத்தான் பொலிசாரும் உதவி செய்தார்கள்.

தலைவர்கள் மக்களைச் சந்திப்பதைத் தவிர்த்து காரை விட்டிறங்காது ஓடினார்கள் என்பதை அங்கிருந்த எல்லோருமே கண்டார்கள். மக்கள் துரையப்பா விளையாட்டரங்கை நோக்கி நகர்ந்த வேளையில் கமரூனும் விக்னேஸ்வரன், சுமந்திரன் ஆகியோரும் நழுவினார்கள். சம்பந்தனின் பஜிரோ தாமதமானதால் ஆர்ப்பாட்டக்காரர்களிடையே மாட்டிக் கொண்டது.

பதில் சொல்லிவிட்டுப் போகுமாறு கடுமையான வார்த்தைகளால் பஜிரோவை சூழ்ந்து கோஷமிட்டார்கள் அவர்கள். சம்பந்தன் அவர்கள் பஜிரோர்வை விட்டிறங்கவில்லை. பொலிசார் மக்களை அப்புறப்படுத்தி அவரது பஜிரோ போக வழியேற்படுத்திக் கொடுத்த போது, அதைப் பயன்படுத்தித் தலைவர் பறந்துவிட்டார்.

மக்கள் பிரச்சினைகளோடு போகும்போது அவர்களிடமிருந்து விலகியோடுவது யார் எவர் என்பது ஊடகங்களுக்குப் புரியாமலா இருக்கிறது? அதை ஒளித்து மறைத்து பத்திரிகைகளும் உணர்ச்சியரசியல் செய்யவேண்டிய அவசியம் என்ன? மக்களோடு நிற்க வேண்டியவர்கள், வெளிநாட்டுத் தலைவரையும் இழுத்துக்கொண்டு ஓடியதை தட்டிக் கேட்க வேண்டிய ஊடகங்கள் அவ்வாறில்லாமல் ஏன் அதை நியாயப்படுத்த வேண்டும்?

இங்கேதான் நமது மக்களுக்குள்ள பிரச்சினைகள் முடியவிடாமல் யாரெல்லாம் இதை இழுத்து நீட்டிச் செல்வதில் லாபமடையப் பார்க்கிறார்கள் என்று நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஏன் எதிர்ப்பும் வெறுப்புமான உணர்ச்சியலையில் மக்கள் தொடர்ந்து இருத்தப்படுகிறார்கள்? யார் யார் லாபத்திற்காக இவையெல்லாம் நடைபெறுகின்றன என்பதைக் கொஞ்சம் நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். - ஆசிரியர்.

# இலங்கை தென்னாபிரிக்காவிடம் நல்லிணக்கத்தை கற்றுக்கொள்ள வேண்டும்

## தென்னாபிரிக்க ஜனாதிபதி

(கொழும்பு)

தென்னாபிரிக்காவின் உண்மைகள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள், அதனால் ஏற்பட்ட விளைவுகள் பற்றி கற்றிந்து கொள்ள இலங்கை மேலும் ஆர்வம் காட்ட வேண்டும் என அந்நாட்டு ஜனாதிபதி ஜேக்கப் ஜூமா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டனர். தென்னாபிரிக்க ஜனாதிபதி, ஜனாதிபதி மகிந்தவை அவரது அலுவலகத்தில் சந்தித்த போது இதனை குறிப்பிட்டார்.

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை ஒழுங்கு செய்தமை குறித்து ஜனாதிபதி ஜூமா, மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்து கொண்டார். ஏற்கனவே இரண்டு நாடுகளுக்கும் இடையில் உள்ள நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டும்.

அபிவிருத்தியடைந்த நாடுகள் ஏனைய நாடுகளின் விவகாரங்கள் தொடர்பில் தமது சொந்தப் பார்வைகளை கொண்டுள்ளன. நாம் முடிவுகளுக்கு வரும் முன்னர் நமது விடயங்கள குறித்து கவனிக்க வேண்டும்.

அதேவேளை தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் மேலும் கற்றறிய வேண்டும் என்ற யோசனையை வரவேற்ற இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்த செயல் முறைகளை முன்னெடுக்கும் வசதியாக இரு தரப்பு பிரதிநிதிகளை பரிமாற்றம் செய்து கொள்வது அவசியம் என்றார்.

30 வருடங்கள் நடைபெற்ற பயங்கரவாத போர் காரணமாக, பெரும்பாலும் தினமும் கொலைகளும், அழிவுகளும் ஏற்பட்டன.

தமிழ் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் புலிகளினால் கொலை செய்யப்பட்டனர். எனினும் போர் முடிவுக்கு வந்து கடந்த நான்கு ஆண்டுகளில் பயங்கரவாதம் தொடர்பிலான எந்தச் சம்பவங்களும் நடைபெறவில்லை என்றும் ஜனாதிபதி ராஜபக்ஷ இதன் போது கூறினார்.

# வவுனியாவிலிருந்து கொழும்பு சென்ற பேருந்துகள் மீது நேற்றும் கல் வீச்சு

(வவுனியா)

சிலாபம் - ஆராச்சிக்கட்டு மற்றும் ரஜகந்தஎலுவ பிரதேசங்களில் வடபகுதியில் இருந்து வந்த மற்றும் சென்று கொண்டிருந்த பேருந்துகள் மீது நேற்றும் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான ஒரு பேருந்து இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமானது.

ரஜகந்தஎலுவ பிரதேசத்தில் வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பேருந்து மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிலாபத்தில் இருந்து அனுராதபுரத்திற்கு யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பேருந்து மீது ஆராச்சிக்கட்டு பிரதேசத்தில் கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பஸ் சாரதி காயமடைந்தார்.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கிச் செல்லும் பேருந்து என்று நினைத்து இந்தப் பேருந்து மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர். மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் பேருந்து மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பியோடியுள்ளனர்.

சிலாபம் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை அதிகாலையிலும் வடபகுதியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டன.

எனினும் இந்தச் சம்பவங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை.

# முஸ்லிம்கள் பிரச்சினைகள் குறித்து மன்னார் அரச அதிபருக்கு மகஜர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மீள் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் தாம் எதிர் நோக்கி வரும் பல் வேறு பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் தமது கோரிக்கையினை வெளிப்படுத்தும் முகமாக மகஜர் ஒன்றினை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.தேசப்பிரியவிடம் கையளித்துள்ளனர்.

குறித்த மகஜரை மன்னார் நகர சபை உறுப்பினர் என்.எம். நகுசின் தலைமையில் மன்னார் மாவட்ட மீள்குடியமர்ந்தோர் நலன சார்ந்த அமைப்பினைச் சேர்ந்தவர்கள் இணைந்து மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு சென்று மன்னார் அரசாங்க அதிபரிடம் மகஜரை கையளித்துள்ளனர். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இடம்பெயர்ந்து நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வந்த இந்த மக்களை அரசு சில வாக்குறுதிகளை வழங்கி மீள்குடியேற்றம் செய்தது. இதன் போது எமது மக்களால் இம்மக்களுக்கான காணி வழங்குதல், வீட்டு வசதி ஏற்படுத்தித்தரல், நஷ்டஈடு வழங்குதல், உட்கட்டுமான வசதிகளைச் செய்து தரல், இங்கு வாழ சகல உரிமைகளையும் பெற்றுத்தரல் போன்ற விடயங்கள் அதிகாரிகளிடம் முன்வைக்கப்பட்டன.

இவை அனைத்தும் செய்து தரப்படும் என்ற உறுதிப்பாட்டுக்கமைய கணிசமான மக்கள் மீள் குடியமர்ந்தனர்.

இருந்தும் இவ்வாக்குறுதிகள் ஏதும் இம்மக்களுக்கு செய்து கொடுக்கப்படவில்லை இங்கு வாழும் மற்றைய சமூகத்துக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தினர்.

இம்மக்களையே அவர்கள் பாதிக்கப்பட்ட சமூகமாக கருதி தங்கள் நிதிகளையும் வளங்களையும் வாரி வழங்கினர்.

எமது மக்களுக்கு கண்துடைப்புக்காக ஒரு சில திட்டங்களை முன்னெடுத்தனர். எமது மக்களின் வேலைவாய்ப்புக்களிலும் இதனையே பின்பற்றுகின்றனர்.

இம் மாவட்டத்தின் பேசாலை, தாழ்வுபாடு, வங்காலை, பள்ளிமுனை, அரிப்பு போன்ற மீனவ கிராமங்கள் ஒவ்வொன்றுக்கும் 100 வீடுகளைக் கொண்ட வீட்டு வசதித் திட்டங்கள் இக்காலப் பகுதியில் அரச அரசசார்பற்ற நிறுவனங்களால் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எமது மக்களுக்கு இவ்வாறான முழுமையான வீட்டு வசதி திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை.

1990க்கு பிறகு பல கிராமங்கள் தமிழ் மக்களுக்காக அரச காணிகளில் காடுகள் அழித்து உறுவாக்கப்பட்டு வழங்கப்பட்டன.

இவ்வாறான கிராமங்களை எம்மால் இனங்காட்ட முடியும். ஆனால் எமது மக்களுக்கு அரசியல் தலைவர்களாலோ அரச அதிகாரிகளாலோ ஏற்படுத்தித் தரப்படவில்லை.

அரச காணி வழங்கலிலும் எமது மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

எமது மக்களுக்கு எங்காவது அரச காணிகள் வழங்கப்பட்டால அதனை இல்லாமல் செய்ய பிற சமூக அரசியல் தலைவர்களும் அச்சமூக தலைவர்களும் விமர்சனங்களையும் போரட்டங்களையும் முன்னெடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இத்தாலி வர்த்தக நிலையத்தில் கேக் திருடிய இலங்கையர்

இத்தாலியின் சவோனா நகரில் உள்ள ஆடம்பர வர்த்தக நிலையம ஒன்றில் திருட முயற்சித்த இலங்கை பிரஜை பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் 100 யூரோ பெறுமதியான கேக் ஒன்றையும் முகச்சவரம் செய்யும் இயந்திரம் ஒன்றையும் திருடி அதனை தனது பிள்ளை அமர்ந்து செல்லும் தள்ளு வண்டியில் மறைத்து எடுத்துச் செல்ல முயற்சித்துள்ளார். இதனைக் கண்டுப்பிடித்த வர்த்தக நிலையத்தின் பாதுகாவலர்கள் அவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஏற்கனவே இந்த வர்த்தக நிலையத்தில் பல தடவைகள் திருடிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சவோனா நகரில் வசித்து வரும் இலங்கையை சேர்ந்த சிங்களவர் ஒருவரையே தாம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவிததனர். கைதுசெய்யப்பட்ட நபர் பின்னர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளார்.



# கூட்டமைப்பின் போராட்டங்களில் மக்களின் நலனுக்கு இடமில்லை

வலிகாமம் வடக்கில் பொதுமக்களுக்குச் சொந்தமான பெருமளவு காணிகளை இராணுவம் தன்னகப்படுத்துவதற்கு மேற்கொள்ளும் முயற்சியை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது. இலங்கையில் வேறெங்கும் இல்லாத அளவுக்குப்பொது மக்களின் பெருந்தொகையான காணிகளை இராணுவம் சுவீகரிக்கின்றது. வளம் நிறைந்த விவசாய நிலங்களும் மீன்வளம் மிக்க கடற்பிரதேசமும் இதற்குள் அடங்குகின்றன. பாதுகாப்பு சார்ந்த அத்தியாவசிய தேவைகளுக்கு இவ்வளவு பெருந்தொகையான காணிகள் அவசியமில்லை.

இக்காணிச் சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்திச் சட்டபூர்வமான உரித்தாளர்களுக்கு அக்காணிகளைக் கையளிப்பதற்கான முயற்சியின் முக்கியத்துவத்தை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது. இந்த முயற்சி

**காணிப் பிரச்சினையின் தீர்வு அரசாங்கம் மேற்கொள்ளும் முடிவிலேயே தங்கியுள்ளது. எனவே, அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை இப்பிரச்சினையின் தீர்வில் முக்கியத்துவம் பெறுகின்றது. உண்ணாவிரதம் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான போராட்ட வடிவமேயொழிய அதுவே பிரச்சினையைத் தீர்க்கப்போவதல்ல. உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்த முயற்சியையும் உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்த தலைவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. பிரச்சினையின் தீர்விலும் பார்க்கத் தங்கள் அரசியல் இருப்புக்கான உத்தரவாதமே இவர்களின் பிரதான நோக்கம் என்பதையே இது புலப்படுத்துகின்றது.**

சங்கர சிவன்

மக்களுக்குப் பலன் தரக்கூடியதாக இருக்க வேண்டுமேயொழிய வெறும் சலசலப்பாகவோ தலைவர்களின் அரசியல் இருப்புக்கான உத்தரவாதமாகவோ அமைவது பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதற்கே உதவும். இந்தப் பிரச்சினையைக் கூட்டமைப்புத் தலைவர்கள் கையாளும் விதத்தைப் பார்க்கும்போது இரண்டு கேள்விகள் பிரதானமாக எழுகின்றன.

காணிப் பிரச்சினைக்கான தீர்வு இராணுவத்துக்கூடாகவா அல்லது அரசாங்கத்துக்கூடாகவா என்பது ஒரு கேள்வி. வைத்தால் குடுமி வழித்தால் மொட்டை என்ற அணுகுமுறை, பிரச்சினையின் தீர்வுக்கு வழி வகுக்குமா? என்பது மற்றைய கேள்வி. அதாவது சம்பந்தப்பட்ட காணிகளைக் கட்டங்கட்டமாக மீட்டெடுக்கும் அணுகுமுறையை நிராகரித்து முழுக் காணிகளையும் ஒரே தடவையில் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்துவது சரியா?

வலிகாமம் வடக்கிலிருந்து வெளியேறிய மக்களை அவர்களின் சொந்தக் காணிகளில் மீள்குடியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த உண்ணாவிரதப் போராட்டத்தைப் பார்வையிடுவதற்குச் சென்ற முதலமைச்சர் விக்னேஸ்வரன் வாழும் உரிமைக்காகவே இராணுவத்துடன் தமிழர் போராடுகின்றனர் எனக் கூறினார். காணி மீட்புப் போராட்டம் இராணுவத்துக்கு எதிரானது எனக் கூறுவது இராணுவத்திடமிருந்தே தீர்வு எதிர்பார்க்கப்படுவதாக அமைகின்றது. இது இராணுவத்தைச்சீண்டிவிடுவது மாத்திரமன்றிப் பிரச்சினையின் அரசியல் அம்சத்தை நிராகரிப்பதாகவும்அமைகின்றது.

ஏனைய திணைக்களங்களைப் போல இராணுவமும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் செயற்படுகின்ற அமைப்பு என்பதால் காணிப் பிரச்சினையின் தீர்வு அரசாங்கம் மேற்கொள்ளும் முடிவிலேயே தங்கியுள்ளது. எனவே, அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை இப்பிரச்சினையின் தீர்வில் முக்கியத்துவம் பெறுகின்றது. உண்ணாவிரதம் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான போராட்ட வடிவமேயொழிய அதுவே பிரச்சினையைத் தீர்க்கப் போவதல்ல. உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்த முயற்சியையும் உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்த தலைவர்கள் மேற்கொள்வதாகத் தெரியவில்லை. பிரச்சினையின் தீர்விலும் பார்க்கத் தங்கள் அரசியல் இருப்புக்கான உத்தரவாதமே இவர்களின் பிரதான நோக்கம் என்பதையே இது புலப்படுத்துகின்றது.

அரசாங்கத்துடன் மேற்கொள்ளும் ஒரே பேச்சுவார்த்தையில் தீர்வுகாண முடியாவிட்டால் விடாமுயற்சியாகத் தொடர்ந்து பேசித் தீர்வுகாணவேண்டும். இவ்விடயத்தில் வடமாகாண சபையும் முக்கிய பாத்திரம் வகிக்கலாம். காணிப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முன்னகர்வுகளை மாகாண சபை மேற்கொள்ளலாம். அதைச் செய்யாமல் தவிர்ப்பதற்காகவே மக்களுக்கும், இராணுவத்துக்கும் இடையிலான போராட்டம் என்ற வகையில் முதலமைச்சர் கருத்துக் கூறினார் போலும்.

எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஒரே தடவையில் தீர்வு கிடைப்பது மிகவும் அபூர்வம். கட்டங் கட்டமாகத் தீர்வை அடைவதுதான் பலன் தரக்கூடிய நடைமுறை. உலக நாடுகளில் பல பிரச்சினைகள் இவ்வாறாகவே தீர்க்கப்பட்டிருக்கின்றன. இலங்கையிலும் மலையகத் தமிழரின் பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமைக்கான தீர்வு இவ்வாறான நடைமுறைக்கூடாகவே பெறப்பட்டது. வலிகாமம் வடக்கு காணிப் பிரச்சினையையும் இந்த வகையிலேயே அணுகவேண்டும்.

இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களைச் சில பிரதேசங்களில் குடியமர்த்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட முயற்சியைக் குழப்பும் வகையிலேயே கூட்டமைப்பு செயற்படுகின்றது. அந்தந்தப் பிரதேசங்களில் காணிகளின் உரித்தாளர்களாக இருந்தும்கூட அகதிகளாக முகாம்களில் வாழும் மக்களை அவர்களின் காணிகளில் மீளக் குடியமர்த்துவதே அமைச்சர் தேவானந்தா மேற்கொள்ளும் முயற்சியின் பிரதான நோக்கம். வேறு பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியிலும் அங்கு குடியேறுவதற்கு விரும்புபவர்கள் உள்ளனர். காணிப் பிரச்சினைக்குக் கட்டங் கட்டமாகத் தீர்வு காணும் இந்த நடைமுறையைக் கூட்டமைப்பு கடுமையாக எதிர்க்கின்றது. அங்கு குடியேறுவதற்கு ஒருவரும் போகவேண்டாம் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. இந்த வேண்டுகோளை விடுப்பவர்கள் மக்களுக்கு அவர்களின் காணிகளைப் பெற்றுத் தருவதாக உத்தரவாதம் அளிக்கத் தயாராக இல்லை. காணிப் பிரச்சினையின் தீர்வுக்காக அரசாங்கத்துடன் பேசுவதற்குத் தயாராக இல்லாத நிலையில் எப்படி இவர்களால் உத்தரவாதம் அளிக்க முடியும்?

மக்களுக்கு என்னதான் நடந்தாலும் தங்கள் போராட்டம் தொடர வேண்டும் என்பதே கூட்டமைப்பினரின் குறிக்கோள். கூட்டமைப்புத் தலைவர்கள் இதுவரை ஏராளம் போராட்டங்களை நடத்தியிருக்கின்றார்கள். பல காரணங்களுக்காக ஆர்ப்பாட்டங்களும், உண்ணாவிரதங்களும் நடத்தியிருக்கின்றார்கள். இவற்றினால் மக்களுக்குச் சிறிதளவாவது பலன் கிடைத்திருக்கின்றதா என்று கேட்டால் இல்லை என்பதே பதில். போராட்டங்களைத் தொடர்ந்து பிரச்சினைகளின் தீர்வுக்காக உரிய முறையில் செயற்படாமல் எப்படிப் பலன் கிடைக்கும்? கூட்டமைப்பின் அழைப்பை ஏற்றுப் போராட்டங்களில் பங்கு பற்றிய மக்கள் அதே பிரச்சினைகளுடனேயே இன்றும் வாழ்கின்றார்கள். போராட்டங்களை ஏற்பாடு செய்த தலைவர்கள் தங்கள் அரசியல் இருப்பைத் தக்கவைத்த பெருமையுடன் வாழ்கின்றார்கள். கூட்டமைப்பு பின்பற்றும் எதிர்ப்பு அரசியலில் இதைத் தவிர, வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. கௌரவமான இணக்க அணுகுமுறையின் மூலம் மக்களின் நன்மைக்காகச் சாதிக்கக்கூடிய எத்தனையோ விடயங்களை எதிர்ப்பு அரசியல் மூலம் இவர்கள் குழப்பியிருக்கின்றார்கள்.

மக்களின் அவலங்களை மூலதனமாக்கி அரசியல் நடத்துவதும் அந்த அவலங்களின் தீர்வுக்கு உருப்படியாக எதுவும் செய்யாதிருப்பதும் தமிழ்த் தலைவர்களின் பாரம்பரியம் ஆகிவிட்டது. தமிழரசுக் கட்சியிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரை இதையே செய்கின்றார்கள். தேர்தல் காலங்களில் இதை நன்றாக அவதானிக்கலாம். மக்களின் அவலங்களைப் பிரசார மேடைகளில் பட்டியல் போட்டு வர்க்குக் கேட்பார்களேயொழிய அந்த அவலங்களுக்குத் தாங்கள் பெற்றுத் தரப்போகும் தீர்வு பற்றி ஒருவராவது பேசுவதில்லை. மக்கள் முகங்கொடுக்கும் அவலங்களிலேயே இவர்களுக்கு அக்கறை. அவற்றுக்கான தீர்வில் அக்கறை இல்லை. வலிகாமம் வடக்குக் காணிப் பிரச்சினையிலும் இதே கதைதான்.

வலிகாமம் வடக்கு மக்களை அவர்களின் சொந்தக் காணிகளில் குடியமர்த்த வேண்டும் என்பதற்காகவே உண்ணாவிரதம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கோரிக்கை நிறைவேறவில்லையென்றால் அடுத்த கட்டம் என்ன? அதற்கான திட்டம் எதுவும் கூட்டமைப்பிடம் இல்லை. அவர்கள் வழமையாகச் சொல்லும் காரணத்தையும் இப்போது சொல்ல முடியாது. சர்வதேசம் கைகொடுக்கும் என்பது கூட்டமைப்புத் தலைவர்களின் வழமையான வாய்ப்பாடு. சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கின்றது என்று மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின் போது மாவை சேனாதிராசா கூறினார். சர்வதேசத்தின் அந்த அவதானிப்பின் விளைவைப் பொதுநலவாய அமைப்பின் உச்சி மகாநாட்டுக்கு எல்லா நாடுகளும் வந்து குவிந்ததில் பார்த்தோம். சர்வதேசத்தைச் சொல்லி இனியும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதைக் கூட்டமைப்பினர் உணரத் தொடங்கிவிட்டனர். சர்வதேசம் இலங்கை அரசின் ஜனநாயக வேடத்துக்கு மயங்கித் தமிழரின் அவலங்களை மறந்துவிட்டதுஎன்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் கூறியிருப்பது இதையே புலப்படுத்துகின்றது.

கோரிக்கை நிறைவேறாவிட்டால் அடுத்து என்ன என்ற கேள்விக்கு மீண்டும் உண்ணாவிரதம் என்பதே கூட்டமைப்பின் பதிலாக இருக்கும். ஏனென்றால் அவர்களிடம் ஆக்கபூர்வமான திட்டம் இல்லை. எல்லாப் பிரச்சினைகளிலும் இதுதான் நிலை. தீர்வு இல்லாமல் வெறும் போராட்டங்களை நடத்திக் கொண்டிருப்பதன் நோக்கம் என்ன?

எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு இல்லாத அவல நிலை தனிநாட்டுக் கோரிக்கைக்கான ஆதரவு வளர வழிவகுக்கும் என்ற குருட்டு நம்பிக்கையா?

**சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கின்றது என்று மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது மாவை சேனாதிராசா கூறினார். சர்வதேசத்தின் அந்த அவதானிப்பின் விளைவைப் பொது நலவாய அமைப்பின் உச்சி மகாநாட்டுக்கு எல்லா நாடுகளும் வந்து குவிந்ததில் பார்த்தோம். சர்வதேசத்தைச் சொல்லி இனியும் மக்களை ஏமாற்ற முடியாது என்பதைக் கூட்டமைப்பினர் உணரத் தொடங்கிவிட்டனர். சர்வதேசம் இலங்கை அரசின் ஜனநாயக வேடத்துக்கு மயங்கித் தமிழரின் அவலங்களை மறந்துவிட்டது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் கூறியிருப்பது இதையே புலப்படுத்துகின்றது.**



பொதுநலவாய அரச தலைவர்கள் மகாநாடு கொழும்பு, தாமரை தடாக மகிந்த ராஜபக்ஷ சர்வதேச திரையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோது கலந்துகொண்ட அரச தலைவர்கள்...

# அகதிகளை கட்டுப்படுத்துவதற்கு ஆஸி - இலங்கை புதிய உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையின் படகு அகதிகளை கட்டுப்படுத்தும் வகையில் இலங்கை அரசாங்கத்துடன் புதிய உடன்படிக்கைக்கு செல்லவுள்ளதாக அவுஸ்ரேலியா தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அபோட் இந்த தகவலை கொழும்பில் வெளியிட்டுள்ளார்.

ஏற்கனவே இலங்கையில் இருந்து புறப்படும் அகதிகளின் படகுகளை அவுஸ்ரேலிய கடலுக்கு அப்பால் வைத்து திருப்பியனுப்பும் நடைமுறையை அவுஸ்ரேலியாவும் இலங்கையும் மேற்கொண்டு வருகின்றன.

இந்தநிலையில் இதற்கு அபபால் மற்றும் ஒரு உடன் படிக்கை ஒன்றைச் செய்துகொள்ள தாம் முயற்சிப்பதாக டோனி அபோட் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தகவல் விரைவில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தடைசெய்த மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்திய 318 பேர் மீது வழக்கு

(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்திய 318 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் புத்தளம் மாவட்டத்திலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கல்முனை, தங்காலை, சிலாபம், நீர்கொழும்பு மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளிலும் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சட்டவிரோத செ[illegible]ற்பாட்டில் ஈடுபடும் மீனவர்க[illegible] கைது செய்வதற்கான நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

# சிறைச்சாலை பாடசாலையில் 280 பேருக்கு கல்வி

(கொழும்பு)

கைதிகள் கல்வி கற்பதற்காக சிறைச்சாலை பாடசாலை வடரேகா சிறையில் ஜனவரி மாதத்திலிருந்து இயங்க இருப்பதாக புனர்வாழ்வு சிறைச்சாலை சீர்திருத்த அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

கல்விப்பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர்தர வகுப்புக்கள் வரையிலும் கல்வி கற்று பல்வேறு குறிறச்சாட்டுகளின் அடிப்படையில் சிறையிலிருக்கின்ற கைதிகளில் 280 கைதிகள் தெரிவு செய்யப்பட்டு கல்வியை மேற்கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இதற்காக ஆசிரியர்களை ஏறபாடு செய்வதற்கும் பாடப்புத்தகங்களை வழங்குவதற்கும் கல்வி அமைச்சு இணங்கியுள்ளது.

மேலும் இந்த சிறைப் பாடசாலையில் நீர்க்குழாய் பொருத்தல், மின்சார இணைப்பு வேலைகளுக்கான பயிற்சிகளும் தரப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் இளவரசர் சார்ல்ஸ் பங்கேற்பு



(கொழும்பு)

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டிற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இளவரசர் சார்ளஸ் மற்றும் அவரது பாரியார் கெமிலா ஆகியோர் கொழும்பில் இடம்பெற்ற பல நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டை முன்னிட்டு நடாத்தப்படுகின்ற வர்த்தக மாநாட்டில் பங்கேற்ற வர்த்தக தலைவர்களை இளவரசர் சார்ள்ஸ் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தார்.

இதனை அடுத்து தேசிய அருங்காட்சியகத்தை பார்வையிடுவதற்கு சென்றிருந்த இளவரசர் சார்ள்ஸை, கலாசார மற்றும் கலைகள் அமைச்சர் வரவேற்றார்.

இந்த சந்தர்ப்பத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் தேசிய அருங்காட்சியகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டிருந்ததுடன், அவர் அவர்களுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

இதேவேளை, இளவரசர் சார்ள்ஸின் பாரியாரான கெமிலா பாகர், கொழும்பு பொது நூலகத்தில் இடம்பெ[illegible] நிகழ்வொன்றில் கலந்து கொண்டார்.

பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்ற சித்திரப்போட்டியை பார்வையிட்டதுடன், சிறார்களுடன் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

கொழும்பு மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு, இளவரசர் சார்ள்ஸின் பாரியார் தலைமை தாங்கினார்.

பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்ற இளவரசர் சால்ஸ், அரச தலைவர்களுடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்வேறு ஆய்வுகளுக்கு பின்னரே இலங்கை பொதுநலவாய மாநாடு

(கொழும்பு)

பல்வேறுபட்ட ஆய்வுகளுக்குப் பின்னரே இலங்கையில் மாநாட்டை நடத்த தீர்மானிக்கப்பட்டதாக பொதுநலவாய நாடுகளின் செயலகம் தெரிவித்துள்ளது.

செயலகத்தின் பேச்சாளர் ரிச்சட் உகு இந்தக் கருத்தை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வெளிப்படுத்தியுள்ளார். இந்தத் தீர்மானத்துக்கு முன்னர் பல்வேறு காரணங்கள் குறிதது கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதில் பொதுநலவாய விழுமியங்களும் அடங்கியிருந்தன.

இதன்போது ஏதாவது குறைகள் இருக்குமாயின் அவற்றை கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பொதுநலவாய மாநாடு புறக்கணிப்பு

# 2015 மாநாட்டை நடத்தும் வாய்ப்பை இழந்த மொரீசியஸ்

(கொழும்பு)

இலங்கையில் மனித உரிமை மீறல்களை காரணம் காட்டி கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணித்த மொரீசியஸ் நாடு எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தும் வாய்ப்பை இழந்துள்ளது.

அடுத்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை மொரீசியஸ் நடத்த வேண்டுமாயின், அந்த நாடுகள் கொழும்பில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா அறிவித்திருந்தாக மொரீசியஸ் பிரதமர் நவீன் சந்திரா ராம்கூலம் சனல் 4 தொலைக்காட்சியிடம் கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்ற தனது முடிவு காரணமாக 2015 ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தும் வாய்ப்பை இழக்க தயார் எனவும் அவர் கூறியுள்ளார்.

மொரீசியஸ் வெளிவிவகார அமைச்சர் அர்வின் பூலெல் கொழும்பு மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார். மொரீசியஸ் எந்த நாடு குறித்து தீர்ப்பு வழங்காது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# தரம் 3 மாணவர்கள் தாக்கிய குளவிக்கூட்டம்

## 30 பேர் மருத்துவமனையில்

(கொழும்பு)

குளவி தாக்குதலுக்கு இலக்கான அரலங்வில பாடசாலை ஒன்றின் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 30 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


நேற்றுமுன்தினம் பிற்பகல் வேளையில் பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னர் சுற்றுலா விஜயத்தின்போது மாணவர்கள் குளவி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் தரம் மூன்றில் கல்வி கற்பவர்கள் என தெரியவந்துள்ளது.

மாணவிகள் 16 பேர், மாணவர்கள் 11 பேர், ஆசிரியர் ஒருவர் மற்றும் பெற்றோர் இருவரும் குளவி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். மரம் ஒன்றிலிருந்த குளவிக் கூடு கலைந்து இவர்களை தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தெகியத்தகண்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.





கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மாதம் பிறந்த குழந்தைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட உணவல்லாத பொருட்களை வைத்தியசாலை பிரதிநிதிகள் வழங்கியதுடன் அக்குழந்தைகளுக்கு வங்கி கணக்கில் 200ரூபா வைப்புச் செய்த சிட்டையையும் ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கினர். (கே)

# இரவில் துண்டிக்கப்படும் மின்சாரம் மாணவர்களின் கல்வி பாதிப்பு

(சுன்னாகம்)

ஏழாலைப் பகுதியில் இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் துண்டிக்கப்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏழாலை மத்திய பகுதியில் கடந்த சில நாட்களாக மாலை 6 மணிமுதல் 9 மணிவரை மின்சாரம் துண்டிக்கப்படுவதால் க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மற்றும் இறுதி தவணைப் பரீட்சைக்கு கற்கும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுள்ளது.

பொதுமக்களும் மாரிகால இருட்டில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

சம்மந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து இதனை சீர் செய்ய வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குடாநாடு முழுவதும் தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதனால் பொதுமக்கள் மகிழ்வடைந்துள்ளதுடன் தமது அன்றாட செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்ள முடிகின்றது.

இந்நிலையில் இப்பகுதியில் மட்டும் முன்னறிவிப்பு எதுவுமின்றி மின்சாரம் தடைப்படுவது வேதனையளிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (66)

# சைவசமய பரீட்சை

(யாழ்.நிருபர்)

கொழும்பு விவேகானந்தா சபை நடத்தும் சைவ சமய பாடப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கை ரீதியாக சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளன.

ஏற்கனவே பாடசாலைகளுக்கு அறிவித்தபடி வெளிமாவட்டப் பாடசாலைகள் தங்கள் மாணவர்களின் சுட்டிலக்கங்களையும் வினாத்தாள் பொதியையும் இணைப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் ஏனைய பாடசாலைகளுக்கு சுட்டிலக்கங்களும் வினாப்பொதியும் நேரடியாக தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் விவேகானந்தா சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார். (10)

# கைதடி பொது நூலக வாசிப்பு மாதநிறைவு நிகழ்வு

(கைதடி)

சாவகச்சேரி பிரதேச சபையின் கைதடி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும், பரிசளிப்பு விழாவும், கரங்கள் சஞ்சிகை வெளியீட்டு விழாவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கைதடி பொது நூலக வளாகத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சிற்றம்பலம் துரைராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபையின் உறுப்பினர்களான ச.தங்கராசா, இ.ஜானகி, ஜே.சிற்சபேசன், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் செல்வி.தி.தர்சினி, சனசமூக அபிவிருத்தி அதிகாரி திருமதி.ஜே.செல்வராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கைதடி பிரதேச பாடசாலை அதிபர்கள் அனைவரும் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு, சித்திரம், கட்டுரை, சிறுகதை போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், முன்பள்ளி மாணவர்களிடையே நடைபெற்ற நிறந்தீட்டல் நிகழ்வுகளில் பங்குபற்றியோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

நூலகத்திற்கு 5 மாணவர்களை இலவசமாக அங்கத்தவராக்கும் நிகழ்வுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (90)

# முரசின் இன்றைய பலன்



(17.11.2013 ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 01 ஆம் திகதி.
கரிநாள்.பூரணை/ சித்தம். பரணி நட்சத்திரம் பி.ப. 12.26 வரை.
பின் கார்த்திகை.
இராகுகாலம் 04.28 - 06.08 வரை. சுபநேரம் 09.08 - 10.38 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** 
நீண்ட காலத்தின் பின்னர் உறவினர் வெளிநாட்டிலிருந்து வருகை தந்ததினால் குதூகலம், நட்பு பகையாக மாறும்வேளையில் சமரசத்தினால் முரண்பாடு தீர்ந்துவிடல்.

**ரிஷபம்** 
வாகனத்தை ஒட்டும் போது செல்போன் பாவிப்பதைக் கைவிட்டதால் விபத்தினின்றும் தப்பிவிடல், அவமானப்பட்டபோதிலும் பொறுமையைக் கடைப்பிடித்ததால் காரிய சித்தி.

**மிதுனம்** 
அதிக வேகம் மரணத்தை ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தில் செயற்பாட்டை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல், பெற்றோரின் சொற்கேட்டு நடக்கும் மைந்தனை எண்ணி பெருமையுறல்.

**கடகம்** 
நோய் குணமடையாத நிலைப்பாட்டில் தெய்வ தலததிற்கு விஜயம் மேற்கொள்ளல். அனுமதிக்காக அதிகாரிகளை சந்தித்தும் பயனின்றிக் கவலையுறல்.

**சிம்மம்** 
டெங்குத்தாக்கம் ஏற்படக் கூடுமென அச்சம் அடைந்து சுற்றாடல் சுத்தத்தில் கவனமெடுத்தல், ஓய்வூதியப் பணம் கிடைக்க கடிதம் வந்ததையிட்டு திருப்தி அடைதல்.

**கன்னி** 
பிரமுகர் தலையீட்டினால் இடமாற்றம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டதால் மகிழ்வுறல், புதிய திட்டம் பெறபச்சைக்கொடி காட்டுதல்,

**துலாம்** 
கொழும்பில் தவங்கிடந்த கன்னியர் துணைவரின் அழைப்பின் பிரகாரம் வெளியூர் செல்லல், புதியன கொளவனவிற்கு மனமிருந்தும் பணப்பற்றாக் குறையால் கைவிடல்

**விருச்சிகம்** 
சுபகாரிய நிகழ்விற்காக கடன் பெற சகோதரர்களை நாடுதல். மனையாளுடன் ஏற்பட்ட தகராறு நீங்கி குதூகலம் நிலவுதல்

**தனுசு** 
வாகனத் தொல்லை காரணமாக விற்றுவிட்டு புதிதாக எடுக்க சிந்தனை செய்தல், விவாக விடயம் சம்பந்தமாக அயலூர் செல்ல முஸ்தீவு.

**மகரம்** 
சம்பள அதிகரிப்புக் கோரி முதலாளியுடன் தர்க்கம் புரிந்து வெற்றிவாகை சூடல், சத்திரசிகிச்சையினால் நோய் குணமடைதல்.

**கும்பம்** 
மேலதிகாரி பதவி உயர்வுக்காக சிபார்சு செய்தல், குடும்பத்தில் புதிய ஜீவன் உருவானதையிட்டு சந்தோஷப்படல்.

**மீனம்** 
பாவனைக்குதவாத மனையை இடித்துவிட்டு புதிய வீடு கட்டும் முயற்சியில் இறங்குதல், வெளியூர் பயண முயற்சிக்கான மகிழ்வான கடிதம்/செய்தி கிட்டல்

# மனநல சமூக சேவையாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளுக்கு மனநல சமூக சேவையாளர் தரம் II பதவிக்கும், போசனை அலுவலர் பதவிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமை சமூகவியல், சமூக மானிடவியல் அல்லது மனநலவியல் தொடர்பான பாடங்களில் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 21 - 35 வயதிற்குட்பட்டவராகவும் உடல் நல, நற்பண்புகள் உடையவராகவும், இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பங்கள் 06.12.2013 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் செயலாளர், (பணிப்பாளர் நிர்வாகம் பிரிவு 06) சுகாதார அமைச்சு, 385, வண.பத்தேகம விமல வங்சதேரர் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அனுப்பும் போது கடித உரையின் இடது மேல் மூலையில் 'மனநலவைத்திய சமூக சேவையாளர் தரம் II பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

பரீட்சைக்கட்டணம் 500ரூபா செலுத்தவேண்டும், எழுத்துப் பரீட்சையும், பொது அறிவுப் பரீட்சையும் இடம்பெறும் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள 08.11.2013 அரச வர்த்தகமானியை பார்வையிடவும். (105)

# மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டி

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை எதிர்வரும் திருவெம்பாவைக் காலத்தில் நடத்தவுள்ள திருவாசகவிழாவை முன்னிட்டுபாடசாலை மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டியை நடத்தவுள்ளது.

தரம் 5 - 10 வரையான மாணவர்களிடையே நடத்தப்படும் இப்போட்டியில் தரம் 5,6 மாணவர்கள் சிவபுராணத்திலும், தரம் 7,8 மாணவர்கள் திருவெம்பாவையிலும், தரம் 9,10 மாணவர்கள் திருப்பள்ளியெழுச்சியிலும் நடுவர்கள் கேட்கும் பாடல்களை மோகன ராகத்தில் பாடிக்காட்ட வேண்டும். அத்துடன் போட்டியில் பங்குபற்றும் அனைத்து தர மாணவர்களினதும் சமயபாடம் தொடர்பான பொது அறிவும் எழுத்துமூலம் பரீட்சிக்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் கல்விகற்கும் தரம், பாடசாலை, பிறந்த திகதி என்பனவற்றைக் குறிப்பிட்டு பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் திருவாசகப் போட்டி ஏற்பாட்டுக்குழு, சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி, தொண்டமானாறு என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். பண்ணிசைப் போட்டிகள் டிசம்பர் மாதம் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், பரிசளிப்பு நிகழ்வு 13ஆம் திகதி வெள்ளிக் கிழமையும் இடம்பெறும். (10)

# வட்டக்கச்சி பொதுநூலகத்தில் வாசிப்பு மாத பரிசளிப்பு

(கிளிநொச்சி)


தேசிய வாசிப்பு மாதத்தை கொண்டாடும் முகமாக கரைச்சி பிரதேச சபையின் வட்டக்கச்சி பொது நூலகத்தில் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பொதுநூலகத்தினால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப் பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் தனிநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (கே)

# கண்ணீருடன் விடைபெற்ற கிரிக்கெட் சகாப்தம்





(மும்பை)

கிரிக்கெட் உலகின் சகாப்தம் என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் கடந்த ஆண்டு ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார். டெஸ்டில் ஆடி வந்த அவர் தனது 200ஆவது டெஸ்டோடு ஓய்வு பெறுவதாக கடந்த மாதம் அறிவித்து இருந்தார்.

அவரது 200ஆவது மற்றும் கடைசி போட்டி சொந்த மைதானமான மும்பை வான்கடே மைதானத்தில் நடந்தது. தனது கடைசி டெஸ்டில் அவர் மிகவும் அபாரமாக விளையாடி இரசிகர்களுக்கு விருந்து படைத்தார். 118 பந்துகளில் 12 பவுண்டரியுடன் 74 ஓட்டங்களைப் பெற்றார்.

நேற்றைய ஆட்டத்தில் கப்டன் டோனி அவரை பந்துவீச அழைத்தார். இரசிகர்களின் பலத்த கரகோசத்துக்கு இடையே டெண்டுல்கர் 2 ஓவரை வீசினார். அவரது கடைசி பந்துவீச்சு என்பதால் அனைவருமே பாராட்டினர்.

இந்திய அணி வெற்றியை பெற்றதும் அவர் ஸ்டம்பை கையில் எடுத்து வெற்றியைப் பகிர்ந்தார். இந்திய வீரர்கள், மேற்கிந்தியத்தீவு வீரர்கள் அனைவரும் டெண்டுல்கரை கட்டி தழுவி பாராட்டினார்கள்.

அவர் மைதானத்தை சுற்றி வலம் வந்தார். இரசிகர்களைப் பார்த்து கையசைத்தார். இரசிகர்கள் அவருக்கு பிரியாவிடை கொடுத்தனர். மைதானத்தை விட்டு வெளியே வரும் போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் வந்தது.

அதை தொடர்ந்து டெண்டுல்கருக்கு மைதானத்தில் பாராட்டு விழா நடந்தது. இந்த நிகழ்ச்சியில் அவரது மனைவி அஞ்சலி, மகள் சாரா, மகன் அர்ஜூன் பங்கேற்றனர்.

அவருக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. பாராட்டு விழாவில் டெண்டுல்கர் பேசும்போது, தனக்காக பாடுபட்ட குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், சக வீரர்கள், முன்னாள் வீரர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்தார்.


அப்போது அவரது கண்களில் இருந்து கண்ணீர் வந்தது. மனைவி அஞ்சலியும், டெண்டுல்கரின் உருக்கமான பேச்சை கேட்டு அழு-தார். கண்ணீருடன் விடை பெற்ற டெண்டுல்கருக்கு மைதானத்தில் குழுமியிருந்த இரசிகர்கள் உற்சாக ஆரவாரம் செய்தனர்.

மைதானத்தை சுற்றி வந்த போதும், பேச ஆரம்பித்த போது இரசிகர்களின் கரவொலி அதிகமாக இருந்தது. தங்களது அபிமான நாயகனின் ஆட்டத்தை இனி பார்க்க-இயலாதே என்ற வருத்தத்தில் ஏராளமான இரசிகர்கள் கண்ணீர் விட்டனர்.

40 வயதான டெண்டுல்கர் தனது 16 வயதில் 1989ஆம் ஆண்டு சர்வதேச போட்டியில் அறிமுகம் ஆனார். அவரது 24 ஆண்டு கால சகாப்தம் நேற்றுடன் கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவு செய்துள்ளது.

கிரிக்கெட்டில் அவர் ஏராளமான உலக சாதனைகள் படைத்துள்ளார். அதனால் தான் அவரை கிரிக்கெட்டின் கடவுள், பிதாமகன், சகாப்தம் என்று அழைக்கிறோம்.டெண்டுல்கருக்கு நிகரான வீரர் யாரும் இல்லை.

அவரது இடத்தை நிரப்புவது கடினம் என்று சொன்னால் அது மிகையாகாது.



## மும்பைத் துளிகள்...

வீரர்களுடன் மைதானத்தை சுற்றி வந்த டெண்டுல்கர் பின்னர் இரசிகர்களிடம் இருந்து விடைபெற்றார்.அப்போது கண்ணீர் மல்க ஆடுகளத்தை இரு கைகளாலும் தொட்டு வணங்கினார்.

26 ஆண்டுகளுக்கு முன் சச்சின் 14 வயது சிறுவனாக இருந்தபோது, மும்பை வான்கடே மைதானத்தில் இந்தியா - சிம்பாப்வே அணிகள் மோதிய ஒருநாள் போட்டியில் (1987 உலக கோப்பை) பந்து சேகரிக்கும் சிறுவனாக செயற்பட்டார். தற்போது அதே மைதானத்தில் தனது 200ஆவது டெஸ்டில் ஓய்வு பெற்றவேளை, சச்சினின் 14 வயது மகன் அர்ஜூன் நேற்று பந்து சேகரிக்கும் பணியில் ஈடுபட்டார்.



## சச்சினுக்கு பாரத ரத்னா

விளையாட்டில் சாதனை படைத்த சச்சின் டெண்டுல்கரை கௌரவிக்கும் வகையில் அவருக்கு இந்தியாவின் மிகஉயரிய விருதான பாரதரத்னாவிருது வழங்க பிரதமர் மன்மோகன்சிங் பரிந்துரை செய்து, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு கடிதம் அனுப்பியிருந்தார். இதனை பரிசீலனை செய்த ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, சச்சினுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படுவதாக நேற்று அறிவித்தார். ஓய்வு பெற்ற நாளிலேயே சச்சினுக்கு இந்த விருது அறிவிப்பு வெளியானது குறிப்படத்தக்கது. இதன்மூலம் பாரத ரத்னா விருதை பெறும் முதல் விளையாட்டு வீரர் என்ற பெருமையை சச்சின். பெற்றுள்ளார். மிக குறைந்த வயதில் பாரத ரத்னா விருதைப் பெற்றவர் என்ற பெருமையையும் சச்சின் பெற்றுள்ளார்.

## ஐ.நா. பாராட்டு

சச்சின் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வுபெறுதையொட்டி, ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) சபை அவருக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

சச்சின் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவது கிரிக்கெட் பிரியர்களுக்கு முக்கியமான நாள். நாம் சச்சினை மிஸ் செய்கிறோம் என்று ஐ.நா. சபைத் தலைவர் பான் கீ மூன் சார்பில் அவருடைய துணை செய்தித் தொடர்பாளர் (பொறுப்பு) பர்ஹன் ஹக் தெரிவித்தார். சச்சின் ஓய்வு குறித்த செய்தியை பான் கீ மூன் எந்தளவுக்கு உன்னிப்பாக கவனிக்கிறார் என்பதை சச்சின் அறிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், நாங்கள் அறிவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்தத் தருணத்தில் அப்பா இல்லையே!

### பிரியாவிடை உரையில் சச்சின் உருக்கம்

(மும்பை)

எனது கிரிக்கெட் வாழ்க்கையை நிறைவு செய்யும் இந்த வேளை அப்பா இல்லாதது பெரும் வருத்தத்தை அளிக்கின்றது. எனக்கு இதுவரையும் ஆதரவு அளித்த இரசிகர்களுக்கு நன்றி என கிரிக்கெட்டின் சகாப்தம் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார். மும்பையில் நேற்று நடைபெற்ற பிரியாவிடை நிகழ்வில் விசேட உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த தருணத்தில் என் அப்பா இல்லாதது வருத்தத்தை அளிக்கிறது. அவருக்கு தான் என் முதல் நன்றி. 1999ஆம் ஆண்டு உலககோப்பை தொடரின்போது அவரது மறைவு செய்தி என்னை அதிர வைத்தது. அவர் எப்போதும் என்னை விட்டு கொடுக்க மாட்டார். எதற்கும் உன் இலட்சியத்தை விட்டு கொடுக்காதே என்று என்னிடம் கூறுவார். அவரை இன்று ரொம்ப மிஸ் பண்ணி விட்டேன். என் அம்மாவின் பொறுமைக்கு நான் அடிமை, என்னை இன்று வரை ஒரு குழந்தை போல தான் அவர் நினைத்து வருகிறார். எப்போதும் நான் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று தான் அவர் நினைப்பார். என் அம்மாவின் பிரார்த்தனை தான் என்னை இந்த அளவிற்கு கொண்டு வந்துள்ளது.

என்னுடைய அங்கிள், ஆண்டிக்கும் இந்த தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் ஊட்டிய உணவு தான் எனக்கு கிரிக்கெட் விளையாட தேவையான பலத்தைக் கொடுத்தது. என்னுடைய சகோதரர்களுக்கும் நன்றி, அவர்கள் கொடுத்த ஊக்கம் தான் எனக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது. என்னுடைய சகோதரி சவீதாவை என்னால் மறக்க முடியாது, நான் முதன் முதலாக விளையாடிய கிரிக்கெட் துடுப்பு அவர் கொடுத்த பரிசு தான். என்னுடைய கோச் சேகர் சேரை சந்தித்தது தான் என் வாழ்க்கையின் திருப்புமுனை, இதுவரை ஒரு தடவை கூட நீ சிறப்பாக விளையாடினாய் என்று அவர் என்னிடம் கூறியதில்லை. அதுதான் மேலும் நான் சிறப்பாக விளையாட ஊக்கம் தந்தது. என் வாழ்க்கையின் மிக அழகான தருணம் என்றால் நான் அஞ்சலியை திருமணம் செய்தது தான். அவரு-டைய ஆதரவு இல்லாமல் நான் எந்த ஒரு இமாலய இலக்கையும் எட்ட முடியாது எனத் தெரிவித்தார்.

## கிரிக்கெட்டில் இல்லாத சச்சினை நினைத்து பார்க்க முடியவில்லை

(மும்பை)

கிரிக்கெட்டில் இல்லாத சச்சினை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை என்று சச்சினின் மனைவி அஞ்சலி தெரிவித்துள்ளார்.

24 வருடமாக கிரிக்கெட், கிரிக்கெட் என வாழ்ந்த சச்சின் நேற்றுடன் பிரியாவிடை பெற்றார். இதனையடுத்து தனது கணவனின் ஓய்வு குறித்து பேட்டி அளித்த சச்சினின் மனைவி



அஞ்சலி,ஓய்வுக்கு பின்னர் சச்சனின் வாழ்க்கையை நினைத்துப்பார்த்தால் வித்தியாசமாக தோன்றுகிறது. அவரை பொறுத்தவரை கிரிக்கெட் தான் கடவுள், கிரிக்கெட்டி லிருந்து ஓய்வு அவருக்கு மட்டுமின்றி எங்களுக்கும் சற்று கடினமாக உள்ளது.கிரிக்கெட்டில் இல்லாத சச்சினை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அவரது ஓய்வு பற்றி பல பேர் விமர்சனம் செய்தாலும், தன்னால் 100 சதவீதம் கிரிக்கெட்டில் கவனம் செலுத்த முடியும் என்று தன்னம்பிக்கையுடன் இருந்தார். தன்னுடைய மனம் எப்போது ஓய்வைப் பற்றி நினைக்கிறதோ அன்றைய தினம் தான் கிரிக்கெட்டில் ஓய்வு பெறுவதாக என்னிடம் கூறினார். ஒருநாள் நானும் அவரும் பேசிக் கொண்ருந்த போது, தன்னுடைய 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெறுவதாக என்னிடம் கூறி-னார். நானும் அவரது முடிவை மதித்தேன். அவரை உண்மையாக நேசித்த அனைத்து இரசிகர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியா இனிங்ஸ் வெற்றி

(மும்பை)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இனிங்ஸ் மற்றும் 126 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இதன் மூலம் டெஸ்ட் தொடரை இந்திய அணி கைப்பற்றிக்கொண்டது.

இந்தியா,மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின்இறுதிப் போட்டி நேற்று மும்பையில் நிறைவடைந்தது. முதல் இனிங்ஸிற்காக ஆடிய மே.தீவுகள் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களையும், இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 495 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில் 313 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகுள் அணி, அஸ்வின், ஓஜா ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியா-மல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் இரண்டாவது இனிங்ஸிற்காக மேற்கிந்தியத்தீவுகள் அணி சகல விக்கெட்டுக்கைளயும்இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராம்டீன் ஆட்டமிழக்காது 53, கிறிஸ் கெய்ல் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஓஜா ஐந்து, அஸ்வின் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இந்திய அணி இனிங்ஸ் மற்றும் 125 ஓட்டங்களால் வெற்றிபெற்றதுடன் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக ஓஜா, தொடர் நாயகனாக ரோகித் சர்மா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, இரு அணிகளுக்கு மிடையிலான ஒரு நாள்போட்டித் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். இந்துக் கல்லூரி பெரு வெற்றி

(மானிப்பாய்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கான போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் இந் துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தனர்.

இதன் படி முதல் இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணி சகல விக்கெட்டுக் களையும் இழந்து 36 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. 86 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ்ப்பாண கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆறு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இதன் மூலம் யாழ். இந்துக் கல்லூரி அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. (48)

### வடக்கு-கிழக்கு லீக்குகளுக்கிடையிலான

# மாபெரும் கால்பந்து விரைவில் மன்னாரில்




(மன்னார்)

வடக்கு-கிழக்கு கால்பந்து லீக்குகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி மன்னாரில் இடம்பெறவுள்ளது.


மன்னார் பனங்கட்டுக்கொட்டு கிராமத்தை சேர்ந்த அமரர்கள் திரு திருமதி மரிசலீன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்பத்தாரின் நிதியுதவியுடன் மன்னார் சென் ஜோசப் விளையாட்டுக்கழகத்தின் ஆதரவுடன் மன்னார் கால்பந்தாட்டலீக்கினால் வடக்கு-கிழக்கு மாகாண கால்பந்தாட்ட லீக்குகளுக்கிடையிலான மாபெரும் கால்பந்தாட்ட போட்டி எதிர்வரும் 22 23,24ஆம் திகதிகளில் மன்னார் நகர சபை மைதானத்திலும் தாழ்வுபாடு கால்பந்தாட்ட சம்மேளன மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய லீக்குகளிலிருந்து சிறந்த 2 அணிகள் வீதம் 16 அணிகளும் மன்னார் லீக்கிலிருந்து சிறந்த 16 அணிகளுமாக 32 சிறந்த அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன.

வடக்கு கிழக்கு லீக்குகளுக்கிடையிலான இம் மாபெரும் போட்டியை கால்பந்தாட்ட இரசிகர்கள் மிக ஆவலுடன் பரபரப்பாக எதிர்பார்த்தவண்ணமுள்ளனர். இவ்வாறான வடக்கு கிழக்கு மாகாணங்களின் லீக்குகளின் சிறந்த அணிகள் பங்குபற்றுவது இதுவே வரலாற்றில் முதல் தடவையாகும்.

முதலாம் இடத்திற்கு 50000.00 பணப்பரிசுடன் வெற்றிக்கிண்ணம் தங்கப்பதக்கமும் 2ஆம் இடத்திற்கு 30000.00 பணப்பரிசும் வெற்றிக்கிண்ணம் பதக்கமும் அரையிறுதியில் தோல்வியடையும் இரு அணிகளுக்கும் தலா 5000.00 வீதமும் பரிசுகள் வழங்கப்படவுள்ளது என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் லீக் தலைவர் மலேசியா பயணம்



(மன்னார்)

மன்னார் கால்பந்தாட்ட லீக் தலைவர் ப.ஞானராஜ் கால்பந்தாட்ட முகாமைத்துவ நிர்வாக கற்கை நெறிக்காக இம்மாதம் 30ஆம் திகதி மலேசியா செல்லவுள்ளார்.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மலேசியாவின் தலைநகர் கோலாலம்புரில் உள்ள ஆசிய கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைமைக்காரியாலயத்தில் நடைபெறும் இப்பயிற்சி நெறியில் இவர் கலந்துகொள்ளவுள்ளார்.

இவர் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் சபை உறுப்பினராகவும் மன்னார் கால்பந்தாட்ட லீக்கின் பொதுச் செயலாளராகவும், மன்னார் மாவட்ட இணைப்பாளராகவும் கால்பந்தாட்ட முதல் தர பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றிக்கொண்டிருக்கிறார்.

அத்துடன் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் உடற்கல்வி ஆசிரியராகவும் பிரபல்யமான கால்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராகவும் திகழ்கின்றார்.

### விசேட தேவையுடையவர்களுக்கான

# விளையாட்டு விழா

(அச்சுவேலி)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் விசேட கல்விப் பிரிவினரால் நடாத்தப்படும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு கோப்பாய் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வரதராஜ மூர்த்தி கலந்துகொள்ளவுள்ளார். (03)

### பாடசாலை விளையாட்டுச் சங்கங்கள்

# கடந்த காலங்களில் கரிசனையுடன் செயற்படவில்லை

(கொழும்பு)

கடந்த காலங்களில் பாடசாலை விளையாட்டு சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு கல்வி அமைச்சினால் எதுவித கரிசனையும் அளிக்கப்படவில்லை. இது விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு மிகப் பிரதான தடையாக காணப்பட்டது. எனினும் விரைவில் இது நிவர்த்தி செய்யப்படும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதன் முறையாக கல்வி அமைச்சும் விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து விளையாட்டுத்துறையினை வளப்படுத்து வதற்கென மகிந்தசிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது பல்வேறு பிரச்சினைகளுடன் இயங்கி வரும் பாடசாலை விளையாட்டு சங்கங்களை எதிர்வரும் வருடத்தில் இருந்து ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் பாடசாலை விளையாட்டு சங்கங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு கல்வி அமைச்சினால் எதுவித கரிசனையும் அளிக்கப்படவில்லை. இது விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கு மிகப் பிரதான தடையாக காணப்பட்டது. இவ்வாறான தடைகளை அகற்றி விளையாட்டுத்துறையினை மேம்படுத்துவதற்கு கல்வி அமைச்சு விளையாட்டு அமைச்சுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போதைய சூழலில் விளையாட்டுத் திறனை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இது விளையாட்டின் தரத்தை உயர்த் தும் வகையில் நிச்சயம் இருக்கும். இதற்கு சகல தரப்பின் ஒத்துழைப்பு அவசியம். குறிப்பாக, பெற்றோரின் ஒத்துழைப்பு மிக அவசியம். அவர்கள் தங்களை பிள்ளைகளை ஆர்வத்துடன் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தொடரை வென்றது தென்னாபிரிக்கா



(சர்ஜா)

பாகிஸ்தான் அணிக்கெதிரான ருவென்ரி-20 தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் சர்ஜாவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டு பிளிசர் 58, அம்லா 48 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 151 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்று ஆறு ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் மசூட் 37, அப்ரிடி 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பர்னல் மூன்று, ஸ்ரெய்ன், இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி-20 தொடரை 2-0 என்ற என்ற கணக்கில் தென்னாபிரிக்க அணி கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதை டு பிளிசர் பெற்றுக்கொண்டார்.

இதேவேளை, ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள்தொடரை தென்னாபிரிக்க அணி 4-1 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது.

# மாகாண சபையும் தமிழீழமும்

**- வே.அர்ச்சுணன் -**




வடக்கின் மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்து இரண்டு தடவைகள் மாகாணசபையின் அமர்வுகளும் முடிவடைந்து விட்டன. ஆனால் உருப்படியான எந்தவொரு தீர்மானங்களோ அல்லது முடிவுகளோ எட்டப்பட்டதாக கருதமுடியாது. அதாவது வடக்கின் மாகாண-சபை தமிழீழத்திற்கு நிகரானதாக இருக்கும் என்ற சாரப்பட கூட்டமைப்பினர் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்ட போதிலும், நடைமுறையில் கூட்டமைப்பினர் எதையுமே சாதிக்கும் வகையில் தங்களுடைய நகர்வுகளை முன்னெடுப்பதாக தெரியவில்லை.

குறிப்பாக காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் என்பன தங்களது கைகளுக்கு வந்து சேரும், இவற்றை தாங்கள் தங்களது கைகளில் எடுப்போம், செயற்படுத்துவோம், தமிழீழத்திற்கு நிகராக மாகாண சபை நிர்வாகத்தை நடத்துவோம் என்றெல்லாம் பிரசாரங்களை முன்னெடுத்து தேர்தலில் அமோக வெற்றியை பெற்றதைத் தொடர்ந்து தங்களுக்குள் முட்டிமோதிக்கொள்ள கூட்டமைப்பினர் ஆரம்பித்தனர். இதனை சகிக்க முடியாத இவர்களுக்கு வாக்களித்த மக்கள் வெட்கித் தலை குனிந்தனர்.

சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது தம்பிக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டுமென்று விடாப்பிடியாக நின்றார். இதைவிட, வடக்கின் மாகாண அமைச்சராக இவரது கட்சியைச் சேர்ந்த திரு. ஐங்கரநேசனை மாகாண முதல்வர் தெரிவுசெய்த போது ஐங்கரநேசனை தொடர்புகொண்ட சுரேஷ் பிரேமச்சந்திரன் நீங்கள் அந்தப் பதவியை எடுக்கக் கூடாது என்ற சாரப்பட அச்சுறுத்தல் விடுத்ததுடன் பின்னர் அவரை தாங்கள் தங்களது கட்சியிலிருந்து நீக்கி விட்டதாகவும், அறிவிப்பை வெளியிட்டார். ஒட்டு மொத்தத்தில் குடும்ப அரசியலையும், தமது தனிப்பட்ட சுயநலன்களையும் முதன்மைப்படுத்தியே கூட்டமைப்பில் பலரும் செயற்பட்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்திருந்தால் கூட்டமைப்பினர் மாகாண சபைத் தேர்தலை புறக்கணித்தவாறு அதற்கு பல்வேறு வியாக்கியானங்களையும், விளக்கங்களையும் சொல்லிக் கொண்டிருந்திருப்பார்கள். இதைவிட மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்களை தேசத் துரோகிகள் என்று இலகுவாகவே பட்டம் சூட்டியும் அழைத்திருப்பார்கள். ஆனால் விடுதலைப் புலிகள் இல்லாத சூழ்நிலையில் தமிழீழத்திற்கு நிகராக வடக்கு மாகாணசபை அமையும், அவ்வாறு அமைத்துக் காட்டுவோம் என்ற சாரப்படவும், கிராமப் புறங்களில் உள்கட்டுமான அபிவிருத்திப் பணிகளை விரைவாக மேற்கொள்ளுவோம் என்ற சாரப்படவும் பிரசாரங்களை மேற்கொண்ட கூட்டமைப்பினர் தேர்தல் முடிந்து மாகாணசபை அமர்வுகள் இரண்டு தடவைகள் முடிந்தும் இந்தக் கிராமப்புற மக்களை இதுவரை சென்று சந்திக்கவில்லை.

குறிப்பாக கல்வியமைச்சர் பின்தங்கிய பகுதிகளுக்கும் கிராமப் புறங்களுக்கும் இதுவரை செல்லவுமில்லை அவர் வரும் நாட்களில் இவ்வாறு செல்லவும் மாட்டார் என்றே கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர்கள் கவலை வெளியிடுகின்றனர். மேல்மட்டம், மேல்வர்க்கம் என்ற சிந்தனையுடன் செயற்படும் கல்வியமைச்சர் பின்தங்கிய பகுதிகளின் கல்வி அபிவிருத்தியிலும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் பற்றியும் பெரியளவில் சிந்திக்கமாட்டார் எனவும் நகரப்புறத்தின் அபிவிருத்தி பற்றியே சிந்திப்பார் - நகர்ப்புறங்களில் இடம்பெறும் விழாக்களில் மட்டுமே கலந்து கொள்வார் எனவும் மாகாண-சபை உறுப்பினர்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் பொறிக்குள்ளும் அதன் சூழ்ச்சி வலைக்குள்ளும் கூட்டமைப்பினர் சிக்குண்டுள்ளதாகவும், தமிழீழத்திற்கும், தமிழினத்திற்கும் துரோகம் இழைத்துவிட்டதாகவும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினர் பகிரங்கமாகவே குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருவதுடன் புலம்பெயர்ந்த தமிழர்கள் மட்டத்திலும், கூட்டமைப்பினருக்கு எதிரான பரப்புரையை விரிவாக மேற்கொண்டு வருகின்றனர். ஜனாதிபதியுடனும் அமைச்சர்களுடனும் கூடிக்குலாவி விருந்துண்டு மகிழ்ந்தவாறு அங்கே ஒரு கதையையும், பின்னர் யாழ்ப்பாணம் வந்தவுடன் இன்னொரு கதையையும் மாகாண முதல்வர் வெளியிட்டு வருகிறார் என்கின்றனர்.

குறிப்பாக மாகாண முதல்வருக்கு தமிழ் ஊடகக் காரர்ளை கண்டாலே கடும் வெறுப்பு ஏற்படுகிறது. இறுதியாக யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற வெளிநாட்டு இராஜதந்திரிகளுடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர்கள் இவரை சந்திப்பதற்கு பார்த்துக்கொண்டு நின்றபோது, ஊடகவியலாளர்களை சந்திக்காமல் சென்றதுடன் அவர்களைப் பார்த்துவிட்டே விலகிச்சென்ற சம்பவமானது யாழ்ப்பாண ஊடகவியலாளர்களை கடுப்பேற்றியுள்ளது.

மாகாண முதல்வர் தனது சந்திப்புகள் செயற்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் நடப்பது அவசியமாகும். மாறாக வாக்களித்த மக்களையும், இவர்களுக்காக குரல் கொடுத்த ஊடகவியலாளர்களையும். வெறுத்து நோக்குவதும் சிறுபிள்ளைத் தனமாக பார்ப்பதும் எந்தளவு தூரம் பொருத்தமானது என்பதை மாகாண முதல்வர் சிந்திக்க வேண்டும்.

அடுத்து, இரண்டாவது மாகாண சபையின் அமர்வின் போது வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றம் தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்படும்

# பிழையின்றித் தமிழ் 56

**- ஞானச்செல்வன் -**

### சற்றே சொல்லாய்வோம்:


ஆகாய விமானம் என்னும் சொல் நிரம்ப நம் பயன்பாட்டில் உள்ளது. பேசுகிறோம், செய்தியிதழ்களில் படிக்கிறோம். இதற்குச் சரியான தூய தமிழ்ச் சொல் நம் எல்லார்க்கும் தெரிந்த ஒரு சொல் "வானூர்தி" இருக்கிறதே! இச்சொல்லை ஏன் பயன்படுத்துவதில்லை? வானில் செல்லும் (பறக்கும்) ஊர்தி (வாகனம்). வானூர்தி - பொருள் வெளிப்படையானது.

தமிழர்கள் ஒட்டுநர் இல்லாமல், தானே இயங்கும் வானூர்தியும் கண்டனர் போலும். "வலவன் ஏவா வான ஊர்தி" என்பது சங்கப் பாட்டு வரி. (வலவன் - பைலட்). சிலப்பதிகாரத்தில் வான ஊர்தி வருகிறது, கண்ணகியை வானுலகு அழைத்துச் செல்லுவதற்காக. சிந்தாமணியில் மயில் வடிவில் அமைந்த வானூர்தி - மயிற்பொறி பேசப்படுகிறது. இராவணன் சீதையைக் கவர்ந்து வானூர்தியில் கொண்டு சென்றான் (தமிழ்க் கம்பன் கூற்றுப்படி) என்றும் படித்துள்ளோம். ஆக வானூர்தியைப் பரப்புவோமாக!

### முருங்கைக்காய் தமிழ்ச் சொல்லா?

தமிழிலுள்ள சில சொற்கள் பிறமொழிச் சொல்லாக இருத்தல் கூடும். முருங்கைக்காய் என்பதை அப்படி யாராவது நினைக்க முடியுமா? தமிழ்நாட்டுக் காய், தூய தமிழ்ப் பெயரே இது என்றுதான் எண்ணுவோம். "முருங்கா" என்னும் சிங்களச் சொல்லே முருங்கை எனத் தமிழில் திரிந்தது என்று "தமிழ் வரலாற்றிலக்கணம்" எனும் நூலில் அ.வேலுப்பிள்ளை எனும் தமிழறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவர், "பால்கனிக்குத் தமிழ் என்ன?" என்று கேட்டார். பால்கனி தமிழ்தானே! பால், கனி (பழம்) தமிழ்ச் சொற்கள் அல்லவோ என்று விளையாட்டாகச் சொல்லிவிட்டுச் சிந்தித்தோம். நிலா முற்றம் என்று




சொல்லலாமே! நிலா மொட்டை மாடியிலும் நன்றாகத் தெரிந்தாலும் வீட்டின் ஒரு பகுதியான பால்கனியில் நின்று நிலவைப் பார்க்க முடியும்.

அதனால் நிலா முற்றம் எனலாம். "வேயா மாடமும் வியன்கல இருக்கையும்" என்று சிலப்பதிகாரத்தில் ஒரு தொடர் உண்டு. இதில் வேயா மாடம் - மேலே கூரை வேயப்படாத திறந்தநிலை மாளிகை எனலாம். இப்போதெல்லாம் சில உயர்நிலை உணவகங்களில் "ரூ.ஃப் கார்டன்" எனும் இடத்தில் உணவு பரிமாறுகிறார்கள். இதுவே வேயா மாடம்.

"மான்கள் காலதர் மாளிகை" பற்றியும் சிலம்பில் வருகிறது. முன்னரே எழுதியுள்ளோம். ஈண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுதல் நல்லது. மானின் கண்போல் வடிவமைக்கப்பட்ட துள்ளகளைக் கொண்ட காற்றுவீசும் வழிகள் அமைக்கப்பட்ட மாளிகை. காற்றுவீசும் வழி எது? இன்று ஜன்னல் (சன்னல்) என்கிறோமே, அதுதான். சிலர் "சாளரம்" என்றும் சொல்வர். இதற்கு அழகான தூய தமிழ்ச் சொல் காலதர் (கால் - காற்று; அதர் - வழி)

### பிழை திருத்தங்கள்:

"மாதராய்ப் பிறந்திடவே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா என்றார் புரட்சிக் கவிஞர் பாரதியார்" என்று ஒரு மருத்துவத் திங்களிதழில் மூலிகை மருத்துவர் எழுதிய கட்டுரையில் படித்தோம். இந்தச் சொற்றொடரில் மூன்று பிழைகள் உள்ளன.

"மங்கையராகப் பிறப்பதற்கே" என்னும் தொடக்கத்தை மாற்றிவிட்டார். "நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்று கவிதை எழுதியவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை. கவிஞர் பெயரைப் பாரதியார் என்று மாற்றிவிட்டார். மேலும் புரட்சிக் கவிஞர் என்று பாரதிதாசனார்க்கு உரிய அடைமொழியைச் சேர்த்துவிட்டார். பாட்டு வரியில் பிழை; பாட்டின் ஆசிரியர் பெயரில் பிழை; அவர்தம் அடைமொழி (பட்டம்) யில் பிழை. சரியாக அறிந்து - அறிந்தவரைக் கேட்டு எழுதலாமன்றோ?

மருந்து நிறுவனம் ஒன்றின் விளம்பரத்தில் "மூல நோய்க்கு முழு ஆதரவு தரும் மருந்து" என்று ஒரு மருந்தின் பெயரைக் குறிப்பிட்டு விளம்பரம் செய்திருந்தார்கள். மூல நோய்க்கு முழு ஆதரவா? அப்படியானால் மூல நோய் நன்றாக முற்றி வளர இம் மருந்து உதவுமா? அவர்கள் நினைப்பது, "மூல நோயை முற்றிலும் அகற்றிட உதவும்" என்ற பொருள் பற்றித்தான். ஆனால் அதற்கான வாக்கிய அமைப்பு அவர்களுக்குத் தெரியவில்லை.

"இருப்பிரிவினரிடையே மோதல்" ஒரு பத்திரிகைச் செய்தி. இரு பிரிவினர் என்று இயல்பாதல் வேண்டும். "ப்" போட்டு வலி மிக வேண்டாம். கோடியக்கரையும், கருப்புப் பணமும் மாறாமல் வந்து கொண்டேயுள்ளன. நாம் பலமுறை எழுதிவிட்டோம். இப்போதும் கோடிக்கரை, கறுப்புப்பணம் என்று எழுதுங்கள் என வேண்டுகிறோம்.

என வலிகாமம் வடக்கு மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இந்த அமர்வின்போது வலிகாமத்தின் மீள்குடியமர்வு பற்றி எதுவுமே கதைக்கப்படவில்லை. தற்போது இந்த மீள்குடியமர்வை வலியுறுத்தி மக்கள் நடத்தும் போராட்டத்தில் கூட்டமைப்பினர் கலந்து கொள்ள செல்கின்ற போது மக்கள் இவர்களிடம் சராமாரியான கேள்விக் கணைகளை தொடுத்து வருகின்றனர்; பதில் அளிக்க முடியாமல் கூட்டமைப்பினர் திண்டாடி வருகின்றனர்.

இம்முறை மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க வேண்டும்; அனுஷ்டிப்போம் என்று கூட்டமைப்பினர் கூறிவருகின்றனர். தமிழீழ கனவுகளோடு வீரச்சாவை தழுவிக்கொண்ட மாவீரர்களுக்கு துரோகம் இழைத்து விட்டு மாகாண சபை நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்துக் கொண்டு மகிந்தவின் செல்லப்பிள்ளைகளாகிவிட்ட மாகாண முதல்வரும் கூட்டமைப்புத் தலைமையும் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க தகுதியுடையவர்களா? அல்லது ஜனாதிபதியுடனும் தென்னிலங்கை அமைச்சர்களுடனும் தங்கள் சுயதேவைகளுக்காக கு[illegible]பி மகிழும் சரவணபவன் எம்.பி போன்றவர்கள் மாவீரர்கள் பற்றிக் கதைப்பதற்கு தகுதி உடையவர்களா? அல்லது எத்தனையோ புலிப்போராளிகளை சுட்டுக் கொண்ட சுரேஸ் பிரேமச்சந்திரன் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கவும் மாவீர் பற்றி கதைக்கவும் தகுதியுடையவரா? என்பதெல்லாம் தமிழ்மக்களது சிந்தனைக்குரிய விடயங்களாகும். இவர்களை வரலாறு என்றைக்கோ ஒருநாள் பதில் கூற வைக்கும்.

# ஆயுதம் வழங்கியதற்கான விலையை அவர் பெற்றுக்கொண்டார்...

## - பேராசிரியர் றோகான் குணரட்ன பேட்டியிலிருந்து...



ஜனாதிபதி பிரேமதாஸவை நான் நன்கறிவேன். எல்.ரி.ரி.ஈ யினருக்கு ஆயுதங்களை வழங்கியபோது ஏன் அப்படிச் செய்கிறீர்கள் என அவரிடம் நான் கேட்டேன். இதைப்பற்றி நான் ரஞ்சன் விஜேரத்னவிடமும் பேசினேன். அவரும் இந்த நகர்வையிட்டு மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தார், மற்றும் இதுபற்றி ஜனாதிபதி பிரேமதாஸவுடன் பேச்சு வார்த்தைகளையும் நடத்தினார். அதற்கான கட்டளையை ஜனாதிபதி பிரேமதாஸ தானே வழங்கினார், மற்றும் இராணுவம் அந்த் விநியோகத்தை தயக்கத்துடன் மேற்கொண்டது. அந்த ஆயுதங்கள் தங்களுக்கு எதிராகத் திரும்பலாம் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஜனாதிபதி பிரேமதாஸ வழங்கிய சீமேந்தினைக் கொண்டுதான் எல்.ரீ.ரீ.ஈ நான்கு தளத்தை கட்டியது.

ஜனாதிபதி பிரேமதாஸ அப்படிச் செய்தது இந்திய இராணுவத்தை திரும்ப அனுப்புவதற்காகவே. பயங்கரவாதிகள் இந்திய இராணுவத்தை தாக்குவதை அவர் கையாள விரும்பினார். இந்திய இராணுவத்தின் இருப்பு நமது இறையாண்மைக்கு ஒரு அச்சுறுத்தல் என அவர் நம்பினார். இந்திய இராணுவம் இலங்கையில் தங்கிவிடும் என ஜனாதிபதி பிரேமதாஸ நினைத்தார், ஆனால் ஜே.ஆர் அப்படி நினைக்கவில்லை. நானும் பின்னவரின் கருத்தையே கொண்டிருந்தேன். இந்திய இராணுவத்தை காட்டிலும் எல்.ரீ.ரீ.ஈ மிகவும் அச்சுறுத்தலானது என நாங்கள் நம்பினோம். எல்.ரீ.ரீ.ஈ யுடான போரில் இந்திய இராணுவம் தோற்றது. அமெரிக்க இராணுவம் வியட்னாமில் தோற்கடிக்கப்பட்டதைபோல அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். கிட்டத்தட்ட 1,555 இந்திய வீரர்கள் உயிரிழந்த அதேவேளை 2,984 பேர்கள் அங்கவீனர்களானார்கள்.

பிரபாகரனை கொல்லவேண்டாம் என்று இந்திய இராணுவத்துக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாக பலரும் நினைக்கிறார்கள். அது ஒரு பொய். அவர்கள் பிரபாகரனை கொல்ல விரும்பினார்கள் ஆனால் அப்படிச் செய்யத் தவறிவிட்டார்கள்.

பிரேமதாஸ, பிரபாகரன் உடன் பேச்சு வார்த்தை நடத்தினார். இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு விரட்டுவதே அவர்கள் இருவரதும் இலட்சியமாக இருந்தது. இருந்தும் இந்திய இராணுவம் திரும்பிச் சென்றது பிரபாகரனை பலப்படுத்தியது, மற்றும் தன்னால் இனி தமிழ்ஈழத்தை கட்டியெழுப்பலாம் என்கிற கற்பனையில் அவர் இருந்தார். உலகிலேயே நாலாவது பெரிய இந்திய இராணுவத்துடன் அவர் போரிட்டுள்ளார். இந்தியா உற்பத்தியாக்கிய திறமையான தலைவரான ராஜீவை, எல்.ரீ.ரீ.ஈ கொலை செய்தது. அவருக்குப் பின்னால் ஆட்சிக்கு வந்தவர்கள் அவர் செய்ததைபோல மற்றொரு நாட்டின்மீது ஆக்கிரமிப்பு செய்ய ஒருபோதும் துணியவில்லை. அந்தக் கருத்தில் பார்க்கும்போது பிரபாகரன் செய்தது சரி. ராஜீவுக்கு பிறகு வந்த தலைவர்கள் அவைரும் பலவீனமான எண்ணமுடையவர்களாகவே இருந்தார்கள்.

ராஜீவை கொலை செய்தபின்பு அவர்கள் பிரேமதாஸவையும் கொன்றார்கள், அவர்களுக்கு ஆயுதம் வழங்கியதற்கான விலையை அவர் பெற்றுக்கொண்டார்...

ஜனாதிபதி பிரேமதாஸ இந்திய இரணுவத்தினரை ஆக்கிரமிப்பாளர்கள் எனச் சொன்னார். எல்லா இந்தியத் தூதுவர்களுமே பொய்யர்கள். ஒருமுறை ஒரு கூட்டத்தில் நான் ஜே.ஆருடன் வைத்து டிக்சிற்றை சந்தித்தேன். ரவி ஜெயவர்தனாவும் எனக்கு எதிரே அமர்ந்திருந்தார். அப்போது ஜே.ஆர். இந்தியா கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதாக சொன்னார், டிக்சிற் தனது கைகளை வீசி அதனை நிராகரித்தார். அதனால் ரவி கோபமடைந்தார். அவர் திடீரென ஒரு கிறனைட்டை எடுத்து மேசைமேல் வைத்தார். டிக்சிற் அச்சமடைந்தார். இந்த கிரனைட் இந்தியாவின் கோயம்புத்தூரில் செய்யப்பட்டது என ரவி சொன்னார். எல்.ரீ.ரீ.ஈ இலங்கையில் தோன்றியது ஆனால் அதன் தாக்கத்தை அது இந்தியாவிலேயே சேர்த்துக் கொண்டது...

சந்திரிகா பிரதம மந்திரியாக பதவியேற்ற முதல் நாளே நான் அவரைச் சந்தித்தேன். எல்.ரீ.ரீ.ஈ இராணுவத்தை முடித்துவிடும்படி அவரிடம் நான் கேட்டுக் கொண்டேன், ஆனால் தான் அவர்களுடன் பேச விரும்புவதாக அவர் என்னிடம் தெரிவித்தார்.

அவரைக் குறி வைத்து நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் அவர் தனது ஒரு கண்ணை இழந்த பின்பு, அவரை நான் திரும்பவும் சந்தித்தேன் அப்போது அவர் எல்.ரீ.ரீ.ஈ யினர் முரடர்கள் எனச் சொன்னார்.

# சின்னச் சின்னcccc














★ ஒரு முள்ளம்பன்றியின் உடலில் சராசரியாக 30 ஆயிரம் முட்கள் இருக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த முட்களுக்குள் காற்று இருப்பதால் முள்ளம்பன்றியால் எளிதாக நீச்சல் அடிக்க முடியும்.

★ மெதுவான செயலாக்கம் எதற்கும் ஆமையை உதாரணம் காட்டி நாம் பேசுகிறோம், எழுதுகிறோம். ஆனால் தரையில் மெதுவாகவே நடந்து செல்லும் ஆமையானது, நீருக்குள் மிக வேகமாக நீந்தக்கூடிய பிராணி. மணிக்கு 25 கி.மீ. வேகத்தில் ஆமையால் நீருக்குள் நீந்த முடியும்.

★ அமெரிக்காவில் நாய்கள் தொடர்பான விஷயங்களுக்காக "நியூயோர்க் டோக்" என்னும் இதழ் நடத்தப்படுகிறது. இதில் நாய்களுக்கான ஜோதிடப் பகுதி கூட உண்டு. நாய்களை நேசிப்பவர்கள் வினாக்களை அனுப்பி பதில் கேட்கலாம். தங்களிடமுள்ள நாய்களை மாற்றிக்கொள்ள விரும்புவோருக்கான பகுதியும் உண்டு. இரு மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகிறது.

★ இரத்தம் என்ன வகை என்று குறிப்பிடும்போது ஆர்.எச். பொசிட்டிவ், ஆர்.எச். நெகட்டிவ் என்று குறிப்பிடுகின்றோம். இதில் ஆர்.எச். என்னும் சொல் ரீஸஸ் என்னும் குரங்கைக் குறிப்பதாகும். ரீஸஸ் என்னும் குரங்கு வகையின் இரத்தத்தை ஆராய்ச்சி செய்துதான் இரத்த வகையைக் கண்டுபிடித்தார்கள். அந்த நன்றியின் காரணமாகவே rhesus factor எனக் குறிப்பிடுகிறார்கள்.

★ அமெரிக்காவைச் சேர்ந்த வோட்டர்மன் 1884ஆம் ஆண்டில் இந்த வகைப் பேனாவைக் கண்டுபிடித்தார். மை ஊற்றி எழுதும் இந்தப் பேனாவில் மை ஊற்றைப் போல் செயல்பட்டதால் "பவுன்டன் பென்" என்ற பெயரைப் பெற்றது.

★ ரோம் மன்னர் நீரோவுக்குப் பார்வைக் கோளாறு ஏற்பட்டிருந்ததால் எப்போதும் ஒரு பெரிய மரகதக் கல்லை வைத்திருந்தார். தம்முடன் உரையாடுபவரது உருவத்தை நன்கு காணும் பொருட்டு அந்த மரகதக் கல்லை, நீரோ தம் கண் முன்னால் வைத்துப் பார்க்க ஆரம்பித்தாராம். இதுதான் மூக்குக் கண்ணாடியின் தொடக்கம். படிப்படியாக இந்த முறை வளர்ந்து, முன்னேறி இன்றுள்ள நிலைக்கு வந்துள்ளது.


★ MAYDAY என்றால் விமானங்கள், கப்பல்கள் ஆபத்தில் இருக்கும் போது பிறரிடம் உதவி கேட்கப் பயன்படுத்தும் வார்த்தை!

★ ஓம்ரோமனி! இது ஒரு கலை வடிவத்தின் ஆங்கிலப் பெயர். கை மற்றும் விரல்களை மாற்றி, மடக்கி, அசைத்து அவற்றின் நிழல்கள் சுவரில் படும்போது புதிய உருவங்களை உண்டாக்கி கதை, சம்பவங்கள் ஆகியவற்றை விவரிக்கும் கலைக்குப் பெயர்தான் இந்த OMBROMANIE!

★ ஒலிம்பிக் பந்தயங்களில் ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசாக ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படுகிறது. இந்தப் பதக்கம் வெள்ளியால் செய்யப்பட்டு மேலே தங்க முலாம் பூசப்பட்டுத் தயாரிக்கப்படுகிறது. தங்கமுலாம் மட்டும் 6 கிராம் எடையிருக்கும். இந்தப் பதக்கம் ஐந்நூறு அமெரிக்க டொலர் மதிப்புள்ளது. நமது நாணய மதிப்பில் சுமார் 65 ஆயிரம் ரூபா.

## நோய்களும் அவற்றால் பாதிப்படையும் உறுப்புகளும்...

டிப்தீரியா (Diphtheria) - தொண்டை
தை.:.போய்ட் (Typhoid) - கல்லீரல், குடல்
காசநோய் (Tuberculosis) - நுரையீரல், எலும்பு
தொழுநோய் (Leprosy) - தோல், கை, கால் விரல்கள்
டெட்டனஸ் (Tetanus) - தாடை, தசை
காட்டராக்ட் (Cataract) - கண்
க்ளோக்கோமா (Glaucoma) - கண்
அஸ்டிக்மாட்டிஸம் (Astigmatism)- கண்
மஞ்சள்காமாலை (Jaundice) - கல்லீரல்
நிமோனியா (Pneumonia) - நுரையீரல்
நீரிழிவு (Diabetes) - கணையம்
ஸிரோப்தால்மியா (Xerophthalmia)- கண்
றிக்கெற்ஸ் (Rickets) - எலும்பு
ஸ்கர்வி (Scurvy) - தோல்



# மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனம் கிளிநொச்சி மாவட்டத்தில் உதயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் மாவட்ட சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் , அரசதுறை அதிகாரிகள், சமூக சேவைகள் அமைச்சின் சிபிஆர் திட்ட தொண்டர்கள், மாற்றுவலுவுள்ளோர் அங்கம் வகிக்கும் கிராமிய மட்ட அமைப்புக்கள், மாற்றுவலுவுள்ளோர்கள், கிளிநொச்சி மாவட்ட மருத்துவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாற்றுவலுவுள்ளோர் தொடர்பாக அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை இணைத்து வேலைத திட்டங்களை முன்னெடுப்பது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மாற்றுவலுவுள்ளோர் தமது தேவைகள், பிரச்சினைகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர்.

கருத்துக்களின் முடிவில் கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனம் அமைக்கப்பட்டது.

இவ் அமைப்பின் தலைவராக தி.சிவ்மாறனும் , செயலாளராக திருமதி.பா.விஜயலட்சுமியும், பொருளாளராக திருமதி. செ.தவச்சித்திராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாற்றுவலுவுள்ளோர் பிரதிநிதிகளும், அரச துறை, அரச சார்பற்ற துறைகளைச் சேர்ந்த தலா 2 பிரதிநிதிகள் வீதமாக 11 பேரைக் கொண்ட நிர்வாக சபை தெரிவ் செய்யப்பட்டது. மேலதிக அரசாங்க அதிபர் செ. சிறிநிவாசன் இவ் அமைப்பின் போசகராகத் தெரிவு செய்யப்பட்டார். (90)

# உள ஆற்றுப்படுத்தல் விழிப்புணர்வு



கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் உள ஆற்றுப்படுத்தலும் சமூக விழிப்புணர்வு நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலகம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியவற்றில் பணிபுரியும் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வளவாளராக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவ அதிகாரி மா. ஜெயராஜா, கிளிநொச்சி மாவட்டச் செயலக உளவள அதிகாரி தே.துஸ்யந்தன், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளசமூகப் பணியாளர் இ.ராஜேந்திரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலகப் பிரிவில் உள ஆற்றுப்படுத்தல் பணிகளை மேற்கொள்வது, சமூக மட்ட விழிப்புணர்வை மேற்கொள்வது தொடர்பான விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன.

கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து இப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கிளிநொச்சி கரித்தாஸ் - கியூடெக் நிறுவ்னம் இச் செயலமர்விற்கான நிதி அனுசரணையை வழங்கியது. (90)

# மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் புதிய நடைமுறை அறிமுகம்

(மானிப்பாய்)

பொலிஸ் நிலையத்திற்குச் செல்பவர்கள் உள்நுழையும் போது இதுவரை காலமும் இல்லாதவகையில் வாயிலில் பதிவு செய்யும் நடைமுறை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினைகளை குறைப்பதோடு அவற்றிற்கு இலகுவில் தீர்வு வழங்குவதே இதன் நோக்கம் என பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இவ் நடைமுறை காரணமாக பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கும் அரச அதிகாரிகளும் கூட உள் நுழையும் போது கட்டாய பதிவிற்குப்படுத்தப்பட்டு வருவதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (48)

# பாடசாலை மாணவர்களுக்கு கவின்கலை பயிலரங்கு

(மானிப்பாய்)

வலிகாமம் கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலகத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான கவின்கலை பயிலரங்கு தொடர்பான செயலமர்வு கோப்பாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இக் பயிலரங்குக்கு கோப்பாய் பிரதேச கலாச்சாரப் பிரிவினரால முதல் கட்டமாக தெரிவு செய்யப்பட்ட இடைக்காடு மகா வித்தியாலயம், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம், கோப்பாய் மகா வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளிலிருந்து 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டது.

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீட்டில் இச்செயற்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. இச் செயற்றிட்டம் மூலம் வீடுகளை அலங்கரிப்பதற்காக ஆடம்பரப் பொருட்களை வெளியிலிருந்து கொள்வனவு செய்யாமல் மாணவர்களே தமது வீடுகளை அலங்கரிப்பதற்கும்தேவையான கைவினைப் பொருட்களை சுயமாக தயாரிப்பதற்கும் பயிற்றுவிக்கப் படுவதுடன் எதிர்காலத்தில் சுயதொழிலை மேற்கொள்ளவும் இது உதவியாக இருக்கும்" என கோப்பாய் பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் திருமதி ஆர். மிலாசினி தெரிவித்துள்ளார். இத்திட்டம் ஒவ்வொரு கட்டங்களாக இனி வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (48)

# திருத்தப்படாத நகர்ப்பகுதி வீதிகள் நெருக்கடியில் போக்குவரத்து

(திருநெல்வேலி)

யாழ். நகரப் பகுதியில் உள்ள பசார் வீதி, விக்ரோறியா வீதி, மின்சார நிலைய வீதி போன்ற முக்கிய வீதிகள் திருத்தப்படாமல் பள்ளமும் திட்டியுமாக உள்ளதால் இவ் வீதிகளினூடாகப் பயணிக்கும் பொது மக்கள் தினமும் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையம், போதனா வைத்தியசாலை, பாடசாலைகள், வங்கிகள் , வர்த்தக நிலையங்கள், ஆலயங்கள் எனப் பல்வகைப்பட்ட தேவைகளுக்கும் பொதுமக்களால் பாவிக்கப்பட்டுவரும் இம் முக்கிய வீதிகள் நகரத்தின் மையத்திலேயே காணப்படுகின்றன.

மழை நேரங்களில் இவ்வீதிகளில் உள்ள பள்ளங்களுக்குள் மழை நீர் தேங்கி நிற்கின்றது பள்ளங்களை விலத்தி செல்லும் வாகனங்களினால் பல தடவைகள் விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. பயணிகள் பலர் இதனால் காயமடைந்துள்ளனர்.

இதர வீதிகள் நகர்ப்பகுதியில் கார்ப்பெற் இடப்பட்டு மிகவும் நேர்த்தியாகக் காணப்படும் இத்தருணத்தில் இவ் வீதிகள் நகரின் அழகைக் கெடுப்பதுடன் பொதுமக்களுக்கு மிகவும் ஆபத்தானவையாகவும் இருக்கின்றன. எனப் பலராலும் குறை கூறப்படுகிறது.

நகரின் மத்தியில் உள்ள இவ்வீதிகளை சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனம் செலுத்தி இவற்றை சிறந்த முறையில் செப்பனிட வேண்டும். எனப் பொதுமக்களினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (137)

# பிரதேசசபையின் அனுமதிப்பத்திரமின்றி வெதுப்பக உணவுகள் விற்றவர் கைது

(திருநெல்வேலி)

பிரதேச சபையின் அனுமதிப்பத்திரமின்றி கோப்பாய் பிரதேசத்தில் வாகனமொன்றில் வெதுப்பகத்தயாரிப்பு உணவுகளை விற்பனை செய்து வந்தவர் கோப்பாய் பிரதேச சபை உத்தியோகத்தர்களிடம் கோப்பாய் பொது சுகாதாரப் பரிசோதகரினால் ஒப்படைக்கப்பட்டார்.


எந்தப் பிரதேச சபையின் அனுமதிப்பத்திரமும் இன்றி யாழ்ப்பாணத்தை சேர்ந்த வெதுப்பகத்துக்கு சொந்தமான இவ் வாகனம் கடந்த 14ஆம் திகதி கோப்பாய் பிரதேசத்தில் நடமாடும் விற்பனையில் ஈடுபட்டிருந்த போது சுகாதாரப் பரிசோதகரினால் இடைமறிக்கப்பட்டது.

இதேசமயம் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளாமல் தின்பண்டங்களை விற்பனை செய்யும் கண்ணாடி வண்டில் ஒன்றும் சோதனையிடப்பட்ட போது விற்பனை உரிமம் இல்லாதபடியினால் அப்பிரதேசத்தில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது.

நடமாடும் விற்பனைக்கு அந்தந்தப் பிரதேச சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்படுவது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)



புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையின் 2 மாடிக்கட்டடத்தின் தோற்றம் (கே)



19 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும் புதுக்குடியிருப்பு பிரதேச சபைக் கட்டடம். (கே)

# 100 மாணவ தலைவர்களுக்கு கிளிநொச்சியில் செயலமர்வு


(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாணவ தலைவர்களுக்கான பெண் தலைமைத்துவத்திற்கான செயலமர்வு கிளிநொச்சியில் கடந்த 8ஆம் திகதி நடத்தப்பட்டது. கிளிநொச்சி மகாவித்தியாலயம் , கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த 100 மாணவர் தலைவர்கள் பங்கேற்றனர்.



கிளிநொச்சி மகாவித்தியாலய அதிபர் எஸ். பங்கயற்செல்வன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கரித்தாஸ் கியூடெக் இயக்குநர் அருட்தந்தை ஏ.ஜே.ஜாவேஸ் கலந்து கொண்டார்.

இந் நிகழ்வில் தேவை நாடும் பெண்கள் அமைப்பின் இயக்குநர் சட்டத்தரணி ஆதித்தன் கார்த்திகா வளவாளராகக் கலந்துகொண்டு மாணவ தலைவர்களுக்கு மனித உரிமைகள் செயல்திட்டம் குறித்து கருத்துக்களைக் கூறினார். (90)



நெடுங்கேணி கதிர்வேலாயுத சுவாமிஆலய முன்றலில் புதிதாக அமைக்கப்பட்ட 21அடி உயரமான பாலமுருகன் உருவச்சிலையைக் காணலாம். (40)

## தொண்டர்களுக்கு செயலமர்வு

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் சமூக சேவைகள் அமைச்சின் மாற்றுவலுவுள்ளோர்களுக்கு சமூக மட்டத்தில் வைத்துப் புனர்வாழ்வளிக்கும் சி.பி.ஆர். திட்டத் தொண்டர்களுக்கான செயலமர்வு கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

பிரதேச செயலக சமூக சேவைகள் கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் தலைமைப்பீட சமூக சேவைகள் அதிகாரி நா.ராஜமனோகரன், கிளிநொச்சி மாவட்ட குடும்பப் புனர்வாழ்வு நிலைய உத்தியோகத்தர் எஸ். பிறேம்குமார், பூநகரி பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி செல்லத்தம்பி சுரேந்திரா ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

கிராம மட்ட சி.பி.ஆர்.தொண்டர்களும்., மாற்றுவலுவுள்ளோரின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (90)

## பாடசாலை தவணை அட்டவணை

பாடசாலைகளில் 2014ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பாடசாலைத் தவணை அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

சிங்கள, தமிழ் பாடசாலைகளுக்காக

முதலாம் தவணை 2014 ஜனவரி 02 ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 2014 ஏப்ரல் 08ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

2 ஆம் தவணை 2014 ஏப்ரல் 21ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2014 ஆகஸ்ட் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

3 ஆம் தவணை 2014 செப்ரெம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2014 டிசம்பர் 05 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

முஸ்லிம் பாடசாலைகளுக்காக

முதலாம் தவணை 2014 ஜனவரி 02ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 2014 ஏப்ரல் 10 ஆம் திகதி வியாழக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

2 ஆம் தவணை 2014 ஏப்ரல் 16ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 2014 யூன் 27 ஆம் திகதி வெள்ளிகிழமை வரை (இரு தினங்களும் உட்பட)

3 ஆம் தவணை 2014 ஆகஸ்ட் 04ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2014 டிசம்பர் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இரு தினங்களும் உட்பட) இது தொடர்பாக கல்வியமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அந்தந்த மாகாணக்கல்வி அமைச்சுக்கள் தத்தமது மாகாணங்களுக்கே உரிய விசேட தேவைகளுக்கு ஏற்புடையதாய் பாடசாலை தவணை அட்டவணையில் ஏதேனும் மாற்றங்கள் செய்யவேண்டுமெனக் கருதினால் கீழே காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய 1997 ஆகஸ்ட் 08 ஆம் திகதி 97/15 ஆம் இலக்கச் சுற்றுநிருபத்துக்கு அமைய இத்தவணை அட்டவணையை மாற்றிக் கொள்ள முடியும்.

பாடசாலைத் தவணை அட்டவணை தொடர்பாக வெளியிடப்பட்ட 97/15 சுற்று நிருபத்தின்படி இலங்கையின் சகல பாடசாலைகளும் வருடத்திற்கு 210 நாட்கள் நடாத்தப்படல் வேண்டுமென தெளிவுபடுத்தப்பட்டிருப்பினும் 2014 ஆம் வருடத்தில் இடம்பெறும் அரசாங்க விடுமுறை தினங்களைக் கருத்திற்கொண்டு 210 நாட்கள் பாடசாலைகளை நடத்துவதற்கு முடியாதுள்ளது. எனவே 2014ஆம் ஆண்டில் அரசாங்க, அரச அங்கீகாரம் பெற்ற சகல தனியார் பாடசாலைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பிரிவேனாக்கள் யாவும் 200 நாட்கள் நடாத்தப்பட வேண்டும் என்பதைக் கருத்திற் கொள்ளவும்.

2014 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சை ஆகஸ்ட் மாதத்திலும் க.பொ.த (சா/த) பரீட்சை டிசம்பர் மாதத்திலும் நடைபெறுவதால் பாடசாலைகளின் ஆகஸ்ட், டிசம்பர் விடுமுறைக் காலங்கள் இத்தவணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டபடியே அமைதல் வேண்டும்.

அரசாங்கம் மூலம் வெளியிடப்பட்டுள்ள விசேட விடுமுறை நாட்கள், சனி,ஞாயிறு நாட்கள், தவணை விடுமுறை நாட்கள் போன்ற காலங்களில் சகல பாடசாலைகளும் மூடப்படும். இருந்தும் விசேட காரணங்களுக்காக பாடசாலை மூடப்படுமாயின் அது தொடர்பாக குறைவடையும் நாட்களுக்காக பதில் பாடசாலை நடத்தப்படுதல் வேண்டும்.

2014 ஆம் ஆண்டிற்குரிய விசேட, உலக மற்றும் சர்வதேச தினங்களையும் பாடசாலையுடன் தொடர்புடைய விசேட தினங்களையும் சகல பாடசாலைகளும் தங்களுக்கு முடியுமான முறையில் கொண்டாட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இத்தவணை அட்டவணையை நடைமுறைப்படுத்துகையில் ஏதாவது சிக்கல்கள் தோன்றின் அது தொடர்பாக பாடசாலை செயற்பாடுகள் கிளையின் கல்விப் பணிப்பாளரைத் தொடர்பு கொள்ளுமாறும் தொலைபேசி இல 0112784845 எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

## பதிவிருக்கப் பெட்டகம்

சீனப்பேரரசின் கடைசி மன்னரான பூயி—யின் வாழ்வியலை ஆவணப்படுத்தும் மிகஅற்புதமான கலைநேர்த்திமிக்க படம் பெர்னார்டோ பெர்டோலூசி இயக்கிய 'The Last Emperor'. அந்தப் புகழ் பெற்ற படத்திலிருந்து ஒரு காட்சி:

சீனாவில் மன்னராட்சி முறை ஒழிக்கப்பட்டு, மக்களாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும் சூழல். முதுமைப்பருவத்தை எட்டியிருக்கும் பூயி, தான் ஆனந்தமாய் ஓடியாடி விளையாடிக் களித்த தனது அரண்மனையைக் காண விழைகிறார். அது இப்போது அருங்காட்சியகமாக மாறியிருக்கிறது. உள்ளே நுழைய நுழைவுச் சீட்டு வாங்க வேண்டும். தான் வாழ்ந்து களித்த இடத்திற்கு நுழைவுச்சீட்டு வாங்கிக் கொண்டு உள்ளே செல்கிறார். அவர் கண்முன்னால் விரிச்சிட்டிருக்கிறது மிகப் பிரமாண்டமான அரண்மனை. படை வீரர்கள் அணி வகுத்து நிற்கும் மிகப்பெரிய மைதானத்தின் வெறுமை. அந்தச்சூழல் அவருக்குப் பழைய ஞாபகங்களைக் கிளர்த்துகிறது. அவரது உடலெங்கும் பரபரப்பும் பதட்டமும் ஏறியடிக்க பிரதான அரசவைக்குச் செல்லும் நீண்ட படிக்கட்டுகளில் ஏறி நடக்கிறார். எதிரில் தனிமையும், இருளும் சூழ்ந்த மண்டபத்தில் அவர் அமர்ந்திருந்த தங்கத்தாலான சிம்மாசனம், கயிற்றுத்தடுப்பு கட்டித் தடை செய்யப்பட்டிருக்கிறது. அவர் கொந்தளிக்கும் உணர்ச்சிகளுடன் பாய்ந்து கயிற்றுத் தடுப்பைத் தாண்டி, சிம்மாசனத்தின் படிகளில் உத்வேகத்துடன் ஏறுகிறார்.

அப்போது அங்கு வரும் காவலாளியின் மகனான ஒரு சிறுவன், 'அங்கே போக அனுமதியில்லை' என்று தடுக்கிறான்.

'நான் அங்கே போகவேண்டும்.. ஏனெனில் நான் அமர்ந்திருந்த சிம்மாசனம் அது..' என்கிறார் பூயி.

சிறுவன் ஒன்றும் புரியாமல், "யார் நீங்கள்..?' என்று கேட்க,

'நான் சீனாவின் பேரரசனாக இருந்தவன்..' என்கிறார் பூயி.

சிறுவன் வியப்புடன், "நான் எப்படி நம்புவது..? நிரூபியுங்கள் பார்க்கலாம்..' என்கிறான்.

பூயி, உடனே ஒரு குழந்தையின் உற்சாகத்துடன் பாய்ந்து சென்று சிம்மாசனத்தில் அமர்கிறார். முகத்தில் மகிழ்ச்சி பூரிக்கிறது. மெதுவாகப் பக்கவாட்டில் குனிந்து, தளப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பொருளை எடுத்துத் தன் சட்டையில் துடைத்து சுத்தம் செய்து அந்தச்சிறுவனிடம் கொடுக்கிறார்.

அது வெட்டுக்கிளி வளர்க்கும் ஒரு சிறிய மரக்கூடு!

குழந்தைப்பருவத்தில் அவர் விளையாடும்போது அதை மறைத்து வைத்தது. அந்தக்கணத்தில் பூயிக்கும் சிறுவனுக்கும் ஏற்பட்ட சந்தோஷத்தை அத்திரைப்படம் காலங்களைக் கடந்து அற்புதமாக்கியது.

இதுதான் ஒரு ஆவணம் கலையாகும் தருணம்.

நிஜத்தில் பூயி அந்த அருங்காட்சியகத்திற்கு வந்திருப்பாரா, தான் குழந்தைப்பருவத்தில் மறைத்துவைத்த வெட்டுக்கிளிக் கூட்டைத் தேடியெடுத்து காவலாளியின் மகனுக்குத் தந்தாரா என்றெல்லாம் சொல்லமுடியாது.

அது ஒரு கலை வெளிப்பாடு.

அப்படியெனில் பொய் சொல்வதுதான் கலையா? அல்ல; பொய்யின் காட்சிப்படிமங்கள் புறம் சார்ந்த மோசமான படிமங்களை ஏற்படுத்தும். கலையாக்கத்தின் காட்சிப்படிமங்கள் உள்முகம் நோக்கிய அகம் சார்ந்த தரிசனங்களை இனங்காட்டும்.

ஒருவரலாற்று ஆவணத்தை திரைப்பட மொழியில் பதிவு செய்யும்போது அப்படி அப்படியே ஆவணத்தை நகலெடுக்கும் காட்சிகளை உருவாக்கினால், அவை ஒரு நல்ல ஆவணப்படமாக மட்டுமே விளங்கும். கலையாக மாறாது.

அதேபோல, இங்கிலாந்தின் வரலாற்று ஆவணமான வெகுஜன வெற்றியடைந்த 'டைட்டானிக்' திரைப்படத்தில் கூட காதலர்கள் இருவரும் கப்பலின் முன்புறப்பகுதியில் கைகளை விரித்துக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து காதலில் திளைக்கும் காட்சி, உலகப்புகழ்பெற்ற காதல் காட்சி. ஆவணத்தைக் கலையாக மாற்றும் தருணம் அது.

இயக்குனர் முஸ்தபா அக்காட் இயக்கிய, லிபியாவின் விடுதலைப் போராட்ட வரலாற்று ஆவணமான 'ஒமர் முக்தார்' என்னும் படத்தில் போராளி முக்தாரைக் கைது செய்து தூக்கிலிடும் காட்சி. பின்புறமாக அவரது கைகள் இறுகக் கட்டப்பட்டிருக்க, தூக்குவிசை இழுக்கப்பட்ட உடன், அவரது கையில் வைத்திருந்த அவரது மூக்குக்கண்ணாடி நழுவிக் கீழே விழும். சுற்றிலும் கூடிநின்றிருக்கும் கூட்டத்திலிருந்து ஒரு சிறுவன் பாய்ந்து வந்து அதை எடுத்துக் கொள்வான். அவரது புரட்சி ஒரு இளம் தலைமுறைக்குக் கை மாற்றப்பட்டு விட்டது என்பதை அவ்வளவு கலாபூர்வமாகவும் குறியீடாகவும் சொல்லியிருப்பார் இயக்குனர்.

வரலாற்றுத் தருணங்களை ஆவணப்படுத்தும் கலைத்தன்மை இது போன்ற அழகியல் நேர்த்திகளைக் கோருகிறது.

– கௌதம சித்தார்த்தன்

# சக்கோட்டையில் மீட்கப்பட்ட ஹெரோயின் ஒருகோடியே 65 இலட்சம் ரூபா பெறுமதி

## அரச பகுப்பாய்வுத் திணைக்களம் தகவல்



(பருத்தித்துறை)

பருத்தித்துறை சக்கோட்டையில் அண்மையில் மீட்கப்பட்ட மூன்றுகிலோ ஹெரோயின் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபா பெறுமதியானது என அரசாங்க பகுப்பாய்வுப் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.




காமினி சில்வா வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ் அத்தியட்சகர்



எஸ்.தமயந்த விஜயஸ்ரீ காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர்



காங்கேசன்துறை உதவிப்பணிப்பாளர் அத்தியட்சகர் நந்தனரணவீர



பருத்தித்துறை செயலகக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜகத்.அபயகோன்

பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைக்காரியாலய பொலிஸ் இன்ஸ் பெக்டர் ஜீகத் அபயக்கோனுக்கு கிடைத்த இரகசியத்தகவலையடுத்து அவர் தலைமையில் சென்ற பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.நிசாந், பொலிஸ உத்தியோகத்தர்களான எஸ்.பண்டார, கே.முருகையா ஆகியோரடங்கிய பொலிஸ் குழுவினால் பருத்தித்துறை சக்கோட்டைக் கடற்பிரதேசத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தினர். இத் தேடுதலின் போது 6 பார்சல்கள் கொண்ட இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 3 கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

மீட்கப்பட்ட இக் ஹெரோயின் போதைப் பொருள் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டது. நீதிபதி இப்பொருளை அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு அனுப்பி அதன் அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தர விட்டிருந்தார். தற்போது அறிக்கை கிடைத் துள்ளது. அறிக்கையில் அந்த 6 பார்சல்களும் ஹெரோயின் போதைப்பொருள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இக் ஹெரோயின் போதைப் பொருள் சம்பந்தமான வழக்கு விசாரணைகள் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி.ஸ்ரீநிதிநந்தசேகரன் முன் நிலையில் விசாரனைக் கெடுத் துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து படகு மூலம கடத்திவரப்பட்ட 1 கோடியே 65 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த ஹெரோயின் போதைப் பொருள் இங்கிருந்து ஏனைய இடங்களுக்குக் கடத்திச்செல்லப் படவிருந்ததாகவும் இதுபொலிஸாரிடம் சிக்கிக்கொண்டதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். வடமாகாணத்தில் பொலிஸாரால் கைப்பற்றப் பட்ட கூடிய எடையுள்ள ஹெரோயின் போதைப்பொருளைக் கைப் பற்றிய பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தலைமைக் காரியா லய பொலிஸ் இன்ஸ் பெக்டர். ஜகத்.அபயக்கோன் தலைமையிலான பொலிஸ் குழுவினரை வடமாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா காங்கேசன்துறை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.தமயந்த விஜயஸ்ரீ, காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.நந்தனரண வீர ஆகியோர் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

அரசாங்கப்பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை கிடைத்துள்ளதையடுத்து இவ் வழக்குத் தொடர்பான மேலதிக அறிக்கை பருத்தித்துறை நீதி மன்றத்தில் எதிர்வரும் 27.01. 2014இல் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலையடுத்து வடமராட்சி கிழக்கு உடுத்துறைப் பிரதேசத்தில் சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸார் உடுத்துறை வடக்கில் 15 கிலோ கஞ்சாவை மீட்டு சந்தேக நபரொருவரையும் கைது செய்தனர்.

இச்சந்தேக நபர் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி. ஸ்ரீநிதி.நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தர விட்டார்.

இக்கஞ்சா வழக்கு மீண்டும் 22.11.2013 பருத்தித்துறை நீதி மன்றத்தில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இவை ஒரு புறமிருக்க பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கிவருவதற்காக இப் பொலிஸ்நிலைய உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவை பருத்தித்துறை தீபஜோதி சனசமூக நிலையமும், சிவில் நிர்வாகக் குழுவும் இணைந்து புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை உப தலைவர் எம்.ஜெகதேவன் தலைமையில் அண்மையில் நடாத்தியதும் குறிப்பிடத்தக்கது. (01)

# ஆட்பதிவு திணைக்களத்தின் புதிய சுற்றுநிருபம்

வெளிநாட்டுப் பிரஜாவுரிமை மட்டும் வைத்திருக்கும் இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவர் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துவதை முற்றாகத் தடை செய்யும் சுற்று நிருபத்தை ஆட்பதிவுத் திணைக்களம் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும், பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது. இதன்படி இரட்டைப் பிரஜாவுரிமை வைத்திருக்கும் இலங்கையர் ஒருவர் மட்டுமே இலங்கை வரும் போது தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்த முடியும்.

வெளிநாட்டுப் பிரஜாவுரிமையை மட்டும் வைத்திருக்கும் ஒருவர் தனது தேசிய அடையாள அட்டையை கிராம அலுவலரிடம் அல்லது பிரதேச செயலரிடம் ஒப்படைத்து பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்திடமும் ஒப்படைத்து பற்றுச் சீட்டைப் பெற முடியும்.. அவ்வாறு செய்யாமல் தொடர்ந்தும் இலங்கைக்கு வரும் போது தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்துவார்களாயின் அது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார். (90)

## புதிய நிர்வாகம் தெரிவு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுரைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொது கூட்டமும் புதிய நிர்வாகத்திற்கான தெரிவும் கடந்த 14ஆம் திகதி கிராம அலுவலர் மண்டபத்தில் நடைபெற்றது

இதில் புதிய நிர்வாகத்தின் தலைவராக இ.பரமேஸ்வரன், செயலாளராக ஐ.அபிலேஸ்வரன், பொருளாளராக அ.உமாமகேஸ்வரனும் தெரிவானதுடன் எட்டு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

இந்நிகழ்வில் கிராம மக்கள் உட்பட கிராம அலுவலர் றஜீந்திரா மற்றும் அரசஅதிகாரிகளும் கலந்து கொண்டனர். (125)

## மரபு வைத்திய சர்வதேச மாநாடு

(யாழ்.நிருபர்)

கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவக்கல்வி நிறுவகம் ஏற்பாடு செய்துள்ள முதலாவது யுனானி ஆயுர்வேத சித்த மருத்துவ மற்றும் மரபு வைத்தியம் தொடர்பான சர்வதேச மாநாடு எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் உள்ளூர் மற்றும் சர்வதேச யுனானி ஆயுர்வேத மற்றும் சித்த மருத்துவ ஆய்வாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். இம் மாநாட்டின் போது ஆய்வுக் கட்டுரைகளும் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் மருத்துவக் கண்காட்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (10)

## உயர்தரப்பரீட்சைக்கு தோற்றாத 21 வயதுக்குட்பட்டவர் பதிவுசெய்யவும்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தாரதர (உ/த) பரீட்சைக்கு இதுவரை காலமும் தோற்றாத 2014ஆம் ஆண்டு முதற் தடவையாக தோற்றவிருக்கும் 21 வயதுக்கு குறைந்த விண்ணப்பதாரிகள் 2014ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

பாடசாலை விண்ணப்பதாரராக தோற்றாது முதற்தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்தியாக க.பொ.த(உ/த) பரீட்சைக்கு 2014ஆம் ஆண்டில் தோற்றவுள்ள அல்லது பரீட்சைக்குத் தோற்றி ஒரு பாடத்தையேனும் மாற்றி வெளிவாரி விண்ணப்பதாரியாகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்களில் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியன்று 21 வயதை விடக் குறைந்த விண்ணப்பதாரிகள் தமது முகவரிக் குரிய மாகாணக்கல்வித் திணைக களத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

மேற்படி நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகள் வலயக் கல்வி அலுவலகத்தின் கல்வி அபிவிருத்திப் பகுதியில் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் மார்ச் மாதத்தில் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்படும் போது மாகாணக் கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்தமைக்கான தகவல்களை அதில் உள்ளடக்கி பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து பரீட்சைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய பேருந்து நிலையம் அமைப்பு



கைதடி ஏ - 9 கண்டிவீதியில் (தற்போது அமைக்கப்பட்டுள்ள வடமாகாணசபைக்கு முன்பாகவுள்ள) யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் இதுவரை காலமும் பேருந்து தரிப்பிடம் இன்றி வெய்யிலிலும், மழையிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் தங்கள் பயணத்தை மேற்கொண்டனர். தற்போது அவ்விடத்தில் புதிய பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதனால் மக்களுக்கு பெரும் நன்மையளிக்கின்றது. (51)

# திருட்டுக்கள் அதிகரிப்பு; அச்சத்தில் அச்சுவேலி மக்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்குள் மட்டும் பல திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக பிரதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


நகர்ப்பகுதியில் உள்ள நகை கடைஒன்றினுள் இரவு வேளையில் புகுந்த திருடர்கள் அங்கிருந்த மடிக்கணனி ஒன்றினையும், சில தங்க ஆபரணங்களினையும், வேறு சில பெறுமதி மிக்க பொருட்களையும் எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை மறுநாள் அச்சுவேலி தெற்குப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் யன்னல் கம்பிகளை கூரிய ஆயுதங்களால் அறுத்துக் கொண்டு உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்து பொருட்களை திருடிக் கொண்டு வெறியேற முற்பட்ட வேளையில் வீட்டார் விழித்துக் கொண்டதால் திருட்டு முயற்சியினைக் கைவிட்டு தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அச்சுவேலியூடாகச் செல்லும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதிப் பகுதியில் வீதியோரத்தால் பயணித்துக் கொடிருந்த பெண்ணொருவரை மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் தாக்கி அவரிடமிருந்த நகைகளை பறிக்க முயற்சி செய்த போதிலும் அம்முயற்சி கைகூடாத நிலையில் தப்பியோடி விட்டனர்.

இவ்வாறாக ஆங்காங்கே தொடரும் திருடர்களின் கைங்கரியங்கள் அதிகரித்துச் செல்வதால் மக்கள் இரவு வேளைகளினை அச்சத்தின் மத்தியில் கழிக்க வேண்டியிருப்பதாகத் தெரிவிக்கின்றனர். (03)

30. அருகில் உள்ள இயந்திரத்தினுள் ஏதோ ஓர் எண் இடப்பட்டுள்ளது. இயந்திரம் அவ்வெண்ணை 3 ஆல்பெருக்கி 2ஐ கூட்டி எட்டைக்கழித்து விடையாக 06 தந்தது எனின் இவ்வியந்திரத்தினுள் போடப்பட்ட எண் யாது?




.......................................

31. 6m உயரமும் 4m அகலமும் உள்ள சுவர் ஒன்றுக்கு வர்ணம்பூச 2லீற்றர் வர்ணம் தேவை எனின் 8m உயரமும் 3m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூச எத்தனை லீற்றர் வர்ணம் தேவை?

.......................................

32. இது மூன்று எழுத்துக்களை கொண்ட சொல்லாகும்
முதலாம் எழுத்து தவத்தில் உண்டு தலத்தில் இல்லை
இரண்டாம் எழுத்து குளத்தில் உண்டு குணத்தில் இல்லை
மூன்றாம் எழுத்து தம்பதியில் உண்டு தளபதியில் இல்லை
இந்த மூன்றெழுத்து சொல் எது?

.......................................

33.

| மைவிழி, நிலவு, திறமை |
|---|
| வியாதி, வகுதி, குணம் |

கூட்டில் சொற்கள் தரப்பட்டுள்ளவாறு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்கு பொருத்தமான சொற்களை புள்ளிக்கோட்டில்' எழுதுக.

அம்மி → மிளகு → குளவி→ ..........................→..........................→..........................


34. இங்கிலாந்தில் பிறந்த நான் சிறந்த எழுத்தாளரும் ஒரு விஞ்ஞானியுமாவேன். வயர்லெஸ் வேர்ல்ட் என்னும் சஞ்சிகையில் வெளியிட்ட கட்டுரை மூலம் பிரபல்யமடைந்தேன். எனக்கு 38பட்டங்களும் விருதுகளும் கிடைத்துள்ளன. நான் யார்?

.......................................

35. சூரிய குடும்பத்தில் மிகப்பெரிய கோளாக உள்ளது. இக்கிரகத்துக்கு ரோமானிய ஆட்சிக்கடவுளான ஜுபிட்டரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இக்கிரகம் சூரியனிலிருந்து ஐந்தாவதாக உள்ளது இக்கிரகத்தின் பெயர் யாது ?

.......................................

❖ **36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு உரிய விடையின் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**


36. 

இந்த விளையாட்டுப்பம்பரத்தில் இறப்பர் விதையில் எத்தனை துவாரங்கள் காணப்படும்?

1. 4 2. 3 3. 2

37. யசுசி இலங்கை நேரப்படி மு.ப. 8 மணிக்கு விமானத்தில் புறப்பட்டு நோர்வே நாட்டு நேரப்படி பி.ப. 5மணிக்கு நோர்வேயை சென்றடைந்தார். இலங்கை நேரம் மு.ப. 5மணியாகும் போது நோர்வே நாட்டு நேரம் மு.ப. 1மணியாகும். யசுசி விமான பயணத்துக்கு எடுத்த நேரம் யாது?

1. 9மணித்தியாலம் 2. 11மணித்தியாலம் 3. 13மணித்தியாலம்

38. 


-?- இக்குறியிடப்பட்ட இடத்துக்கு வரவேண்டிய எண்ணை தெரிவு செய்க.

1. 19 2. 22 3. 25

39. மாலை வேளையில் நிச்சயம் நடைபெறக்கூடியது.
1. அலுவலகம் சென்றவர்கள் வீடு திரும்புதல்.
2. பறவைகள் தமது இருப்பிடம் நோக்கிச்செல்லுதல்.
3. கருமுகில்கள் வானில் தென்படுதல்.

40. வெளிநாட்டுக்குச்செல்லும் ஒருவரிடம் கட்டாயம் இருக்கவேண்டியது.
1. கடவுச்சீட்டு 2. அடையாள அட்டை 3. சாரதி அனுமதிப்பத்திரம்



## தரம் - 5 புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு



01. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள பிராணிகளை இரண்டு கூட்டங்களாக பிரிக்கலாம்




இக்கூட்டங்களை சரியாக காட்டும் விடையை தெரிவு செய்க.

1. A, B / C, D 2. A, D / B, C 3. D, B / A, C

02. இங்குள்ள உருக்களில் காட்டப்பட்டுள்ள இசைக்கருவிகளை மூன்று கூட்டங்களாக பிரிக்கலாம்.




இக்கூட்டங்களை சரியாக காட்டும் விடையை தெரிவு செய்க.

1. A, F / B, D / C, E 2. C, D / B, F / A, E 3. A, D / C, E / B, F

03. என்னிடம் சில முத்திரைகள் உள்ளன. அவற்றில் இரண்டைத்தவிர ஏனையவை 5 ரூபா முத்திரைகள். இரண்டைத்தவிர ஏனையவை 4 ரூபா முத்திரைகள். இரண்டைத்தவிர ஏனையவை 10 ரூபா முத்திரைகள் என்னிடம் உள்ள முத்திரைகள் எத்தனை?

1. 3 2. 8 3. 12

04. கண்ணனுக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை விடுமுறை கிடைக்கும். விமலனுக்கு மூன்று நாட்களுக்கு ஒரு முறை விடுமுறை கிடைக்கும். குமணனுக்கு நான்கு நாட்களுக்கு ஒரு முறை விடுமுறை கிடைக்கும். மூவருக்கும் இம்மாதம் 9ம் திகதி விடுமுறை கிடைத்தது எனின் மீண்டும் எத்தனையாம் திகதி மூவருக்கும் விடுமுறை கிடைக்கும்?

1. 21 ஆம் திகதி 2. 15 ஆம் திகதி 3. 17 ஆம் திகதி

05. ஒரு பையில் 3 மஞ்சள் நிறப்பந்துகளும், 5 சிவப்பு நிறப்பந்துகளும் உள்ளன. ஒரு மஞ்சள் நிறப்பந்தினை கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பையிலிருந்து ஆகக்குறைந்த எண்ணிக்கையாக எத்தனை பந்துகளை வெளியே எடுக்கவேண்டும்?

1. 5 2. 6 3. 8

06. கோலத்துக்கு ஏற்ப அடுத்துவரும் பொருத்தமான உரு எது?



07. தரப்பட்ட மூன்று உருக்களை ஒன்றாக சேர்க்கும் போது கிடைக்கும் சரியான விடையை தெரிவு செய்க.



08. மழைகாலங்களில் மின்னல் ஏற்பட்ட பின்பே இடிமுழக்கம் ஏற்படுகிறது இதற்கான காரணம்.
1. ஒலியை விட ஒளிவேகம் கூடியது.
2. ஒளியை விட ஒலி வேகம் கூடியது
3. வானில் மின்னல் ஏற்பட்ட பின்பே இடி முழங்குவதால்

09. முயன்றால் வெற்றியீட்டலாம்.
1. இது எப்பொழுதும் உண்மையாகும்
2. இது பெரும்பாலும் உண்மையாகும்
3. இது ஒரு போதும் உண்மையானதன்று

10. எல்லா மரங்களுக்கும் பொதுவான இயல்பு
1. இடம் பெயர்தல் 2. உணவு தயாரித்தல் 3. வளர்தல்


11. 2011ஆம் ஆண்டு 21ஆம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தமாகும். அதன்படி 1954ஆம் ஆண்டு
1. 19ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தம்
2. 20ஆம் நூற்றாண்டின் 6ஆம் தசாப்தம்
3. 20ஆம் நூற்றாண்டின் 5ஆம் தசாப்தம்


12. 19ஆம் நூற்றாண்டின் முதலாம் தசாப்தத்தை குறிக்கும் ஆண்டைத்தெரிவு செய்க.
1. 1805 2. 1923 3. 1906

❖ **13 தொடக்கம் 15 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிலும் காரணம் முதலில் தரப்பட்டுள்ள விளைவு அதனை தொடர்ந்து வருகின்றதாயின் ( ✓ ) எனவும் அவ்வாறு இல்லை எனின் ( ✗ ) எனவும் அடையாளம் இடுக.**

13. பசி ஏற்பட்டது உணவு உண்டேன் ( )
14. நெருப்புக்காய்ச்சல் ஏற்பட்டது. அசுத்தமான நீரை பருகினேன் ( )
15. பரீட்சையில் சித்தியடைந்தேன் நன்றாக படித்தேன். ( )

❖ **16ஆம், 17ஆம் வினாக்களில் ஒரு பொருளை உயரத்தில் இருந்து நேராக பார்க்கும் போது அது தோன்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளை பக்கத்தில் இருந்து பார்க்கும் போது அது தோன்றும் விதத்தை காட்டும் உருவினை தெரிவு செய்க.**

16.


17.




❖ **பின்வரும் கோட்டுப்படத்தின் உதவியுடன் 18ஆம், 19ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| | |
|---|---|
| அழிறப்பர் - 2<br>அடிமட்டம் - 3 | 32.00 |
| அழிறப்பர் - 3<br>அடிமட்டம் - 4 | 44.00 |

18. அடிமட்டம் ஒன்றினதும் அழிறப்பர் ஒன்றினதும் விலை யாது?
1. 9.00 2. 12.00 3. 15.00

19. அடிமட்டம் ஒன்றின் விலை யாது?
1. 10.00 2. 8.00 3. 9.00

❖ **பின்வரும் ஆங்கில எழுத்துக்கள் ஆண்டுகளை குறிக்கின்றன.**

| | | | |
|---|---|---|---|
| K - 1969 | P - 1815 | R - 1896 | M - 1924 |

20. நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டை குறிக்கும் ஆங்கில எழுத்து எது?
1. K 2. R 3. M

21. நீல்ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடி எடுத்து வைத்த ஆண்டை குறிக்கும் ஆங்கில எழுத்து எது?
1. M 2. P 3. K

22. இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்ட ஆண்டை குறிக்கும் ஆங்கில எழுத்து எது?
1. P 2. R 3. M

❖ **மரதன் ஓட்டப்போட்டி ஒன்றை ஓடிமுடிக்க ஐந்து வீரர்களுக்கு எடுத்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| | | |
|---|---|---|
| குகன் - 70 நிமிடம் | தாவீது - 1மணி 20 நிமிடம் | ஜோன் - 1மணி 5நிமிடம் |
| ராகுல் - 80 நிமிடம் | டில்ஷான் -1¼ மணித்தியாலம் | |

23. மரதன் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தை பெற்றவர் யார்?
1. குகன் 2. ஜோன் 3. டில்ஷான்

24. மரதன் ஓட்டப்போட்டியில் ஒரேநேரத்தில் ஓடிமுடித்த இரண்டு வீரர்கள் யாவர்?
1. ராகுல், தாவீது 2. குகன், ஜோன் 3. டில்ஷான், தாவீது

25. போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீரர்கள் முறையே
1. ஜோன், ராகுல், தாவீது 2. டில்ஷான், ஜோன், குகன் 3. ஜோன், குகன், டில்ஷான்


❖ **அறிவுறுத்தலுக்கு ஏற்ப செயற்படுக.**

26. "கந்தையானாலும் கசக்கிக்கட்டு" என்னும் பழமொழி கட்டுதல் பற்றியது எனின் புள்ளிக்கோட்டில் அறிவு என எழுதுக. சுத்தம் பற்றியது எனின் புள்ளிக்கோட்டில் புலமை என எழுதுக. ..................

27. ஆபிரிக்க நாடுகளுக்கு கிழக்கே இலங்கை அமைந்துள்ளது எனின் கண்டம் என புள்ளிக்கோட்டில் எழுதுக. மேற்கே அமைந்துள்ளது எனின் புள்ளிக்கோட்டில் சமுத்திரம் என எழுதுக. ..................

❖ **கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

நாதன்,வரன்,வசீம் என்ற மூன்று மாணவர்கள் முறையே நூலகம்,பாடசாலை,மைதானம் என்பவற்றுக்கு சென்ற பயணப்பாதை கீழே தரப்பட்டுள்ளது.




28. மூவரிலும் அதிக தூரம் சென்றவர் யார்? ..................

29. அதிக தடவைகள் வலப்பக்கத்துக்கு திரும்பிச் சென்றவர் யார்? ..................

# குமுதினி நினைவுத்தூபி வலி சுமந்த வரலாறு; உளிகொண்டு உடைத்துவிட முடியாது



## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்

குமுதினி நினைவுத்தூபி, வலி சுமந்த வரலாறு அதை உளி கொண்டு உடைத்து விட முடியாது - ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களின் துன்பதுயரங்கள், வாழ்க்கையிலுள்ள இடர்பாடுகள் மற்றும் பிரதேசங்களிலுள்ள வளங்களின் தன்மை போன்றவற்றை அறியாது அரசியலில் நுழைந்தவர்கள் உண்மைக்குப் புறம்பாக பொறுப்பற்றவிதமாக அறிக்கைகளை வெளியிட்டு வருவது கவலை தருகின்றது.

நெடுந்தீவு மக்களின் வாழ்வியலையும், வளங்கள் சார்ந்த சவால்களையும் வாழ்ந்து அனுபவித்த அந்த மண்ணின் மைந்தன் நான்.

அவர்கள் நடுக்கடலில் அநாதரவாக விடப்பட்டபோது, அடுத்தவேளை உணவுக்காக அந்தரித்துத் திரிந்தபோது அவர்களுடன் வாழ்ந்தவன். அவர்களின் வாழ்வில் இன்று ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சிக்காக எமது தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சேர்ந்து பாடுபட்டு உழைத் தவன்.

அரசியல் சுய இலாபங்களுக்காக இன்று நேற்று நெடுந்தீவுக்குப் படகு ஏறிச் சென்றவன் இல்லை. எனது மண்ணுக்கும், எனது மக்களுக்கும் எது பயன் தருமோ, எது நலன் தருமோ அவற்றையே எனதும் எனது கட்சியினதும் இலட்சியமாக எண்ணிச் செயலாற்றி வந்திருக்கின்றேன்.

அண்மையில் நெடுந்தீவு தொடர்பாக வெளியாகிய செய்திகள் என்னை மிகவும் கவலைகொள்ளச் செய்தது. மாகாண சபை உறுப்பினர் ஒருவரால், மாகாண சபைத் தேர்தலின் பின்னர் நெடுந்தீவு பிரதேசத்தில் மக்களை பழிவாங்கும் எண்ணத்துடன் எமது பிரதேச சபையினர் குடி நீருக்காக மக்களுக்கு உப்புநீரை வழங்குவதாக பத்திரிகைகளில் செய்தியை வெளியிட்டுள்ளார்.

குறித்த மாகாணசபை உறுப்பினர் நெடுந்தீவு பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருந்தும் அப்பிரதேசத்தில் நடப்பதை அறியாதளவுக்கு உள்ளார் என்ற விடயம் மனவருத்தத்தை தருவதாகவே காணப்படுகின்றது. அதிலிருந்து நெடுந்தீவுக்கும் இவர்களுக்குமான தொடர்பு எவ்வளவு இடைவெளியானது என்பதைப் புரிந்து கொள்ளமுடிகின்றது.

நெடுந்தீவு பிரதேசத்தில் பெருமளவான இடங்களில் உப்புநீர் காணப்படுகின்ற நிலமையில் மக்களுக்கு எந்த வகையில் குடிநீருக்கு நன்னீரை வழங்க முடியுமோ அவ்வாறான வகையில் நெடுந்தீவு பிரதேசசபை குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது என்பதனை அப்பிரதேச மக்களும் நன்கறிவார். இச்செய்தியினை சுயலாப அரசியலுக்காக வெளியிட்டவர்களும் அறிவர் என்பதுடன்,

இதேவேளை நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் குமுதினி நினைவுத் தூபியை நெடுந்தீவு பிரதேச சபையும், கடற்படையினரும் சேர்ந்து அழிப்பதாகவும் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

மேற்படி குமுதினி நினைவுத் தூபியானது புனர்நிர்மாணம் செய்யப்படுவதற்கே நெடுந்தீவு பிரதேச சபை உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்படுவது அனைவரும் அறிந்த விடயமாகும்.

போராட்ட வரலாற்றில் நெடுந்தீவு மக்களின் இரத்தம் இந்துமா கடலில் சிந்திய இரணமிக்க சம்பவத்தின் நினைவுத்தூபி அதுவாகும். நெடுந்தீவு மக்களின் மனங்களிலுள்ள வேதனைகளின் பிரதிபலிப்பாக விளங்கி வருகின்ற மேற்படி தூபியின்ன இடிக்கவோ, அகற்றவோ எந்தப் பொழுதிலும் எவருக்கும் நாம் இடமளிக்கப்போவதில்லை.

உரிமைப் போராட்டத்தில் நெடுந்தீவு மக்கள் கொடுத்த ஈடுசெய்யமுடியாத இழப்பின் அடையாளமாக அந்தத்தூபி நிமிர்ந்து நிற்கின்றது. அதைப் புனரமைக்கவே நாங்கள் விரும்புகின்றோம். அதற்காகவே ஆரம்பகட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அதைப் புரிந்து கொபோக்கற்ற விதத்தில் அரசியல் நடத்துவதற்காகவும் புண்பட்ட மக்களின் மனத்தை கிளறிவிடுவதற்காகவும் சில தீய அரசியல்வாதிகளும், அவர்களுக்கு துதிபாடும் ஊடகங்களும் செயற்படுகின்றன.

இவ்வாறான செயல்களுக்கு பதிலாக மக்களோடு மக்களாக தமது பிரதேசங்களில் வாழ்ந்தால் மக்களின் துன்பதுயரங்கள் மற்றும் அபிலாசைகளை அறிந்து கொள்ள முடியும். கடந்த காலத்திலும் எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியையும் நெடுந்தீவு மக்களையும் முரண்பட வைக்கும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டதும் பின்னர் சதிகாரர்கள் தோற்றுப் போனதும். நெடுந்தீவு மக்கள் உண்மையைப் புரிந்துகொண்டதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சில காலங்களுக்கு முன்னர். யாழ். நல்லூர் பகுதியிலுள்ள சங்கிலிய மன்னனின் சிலையினை யாழ்.மாநகர சபை புனர்நிர்மாணம் செய்யும் போது ஈ.பி.டி.பி.யினால் நிர்வாகிக்கும் யாழ். மாநகரசபை சங்கிலியன் சிலையினை அகற்றி அவ்விடத்தில் புத்தர்சிலையினை நிர்மாணிக்கப்போகின்றது என்று சில ஊடகங்கள் தவறான செய்தியை பிரசுரித்தமையும் தற்போது சங்கிலியன் மன்னனின் சிலை மிகச் சிறந்த முறையில் நிர்மாணிக்கப்பட்டிருப்பதையும், அதேயிடத்தில் தற்போதும் கம்பீரமாக தோற்றமளிப்பதையும் அனைத்து மக்களும் அறிவார்கள். எம்மீது அவதூறு பரப்பிய ஊடகங்களும், அரசியல்வாதிகளும் வெட்கித் தலைகுனிந்திருப்பார்கள். என்பதையும் ஞாபகப்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.

ஆகவே எதையும் ஆராய்ந்து பார்க்காமல், உண்மையை தெரிந்து கொள்ள முற்படாமல் சுய இலாபங்களுக்காக அரசியல்வாதிகளும், வியாபார பரபரப்புக்காக ஊடகங்களும் மக்களை குழப்பும் செயற்பாட்டை தவிர்த்துக் கொண்டு பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்.

நீங்கள் தேர்தல் காலத்தில் மட்டும் மக்களைத் தேடித் திரிபவர்கள். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாமோ, எப்போதும் மக்களுடன் வாழ்பவர்கள்.

தேர்தல் முடிவுகளை கணக்கில் கொண்டு நாம் முடிவுகளை எடுப்பவர்களில்லை. எமக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகள் மற்றும் விருப்பங்களை நன்றாகப் புரிந்து கொள்ளமுடியும். நீங்கள் இப்போது தொட்டுப்பார்ப்பதை, இருபது வருடங்களுக்கு முன்னரே தோளில் தூக்கிச் சுமந்தவர்கள் நாங்கள் என்பதையும் தோழமையோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

---

### நட்டாங்கண்டலில்

# நடமாடும் மருத்துவ முகாம் 200 பேருக்கு மூக்குக்கண்ணாடி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட (Lions club) அனுசரணையுடன் முல்லைத்தீவு RDHS மற்றும் மல்லாவி MOH ஆகியன இணைந்து நடாத்தும் மாபெரும் நடமாடும் மருத்துவ முகாமும், சமூக நல உதவித்திட்டங்களும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் இன்று மு.ப 9.00 - பி.ப 4.00 வரை நடைபெறவுள்ளது.

யாழ், கொழும்பிலிருந்து பிரபல வைத்தியர்களும், விசேட வைத்திய நிபுணர்களும் பங்குபற்றி மருத்துவ ஆலோசனைகளும் மருத்துவ பரிசோதனைகளும், நீரிழிவு, குருதி அழுத்தம், கண் பரிசோதனை மற்றும் ஏனைய நோய்களுக்குமான மருத்துவ ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கவுள்ளனர்.

கண்பார்வை குறைந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 200 நபர்களுககு இலவச மூக்குக்கண்ணாடிகள் வழஙகப்படும். அத்துடன் வறுமைக் கோட்டிற்குட்பட்ட மக்களிற்கு உடு புடவைகளும், பால்மா பைக்கறறுகளும் பயன்தரு மரக் கன்றுகளும் வழங்கப்பட வுள்ளன.

இந்த இலவச மருத்துவ முகாமில் பொதுமக்கள் கலந்து பயனைப் பெறுமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.



கரைச்சி பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநர்களுக்கான ஒரு நாள் திறன்விருத்திச் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது. பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.பி. அமலராசா வளவாளராகப் பங்குபற்றினார்.(90)

---

## கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு விவசாயிகள் கோரிக்கை

(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட சேனைப்பிளவு, ஒலுமடு கற்குளம், பட்டிக்குடியிருப்பு, மருதோடை, மாராயிலுப்பை குளவிசுட்டான் மாமடு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் காலபோகபயிர்ச்செய்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கால்நடை உரிமையாளர்களினால் கால்நடைகள் உரிய நேரத்தில் கட்டுப்படுத்தப்படாத நிலையில் இரவில் கட்டாக்காலிகளாக விடுவதனால் பயிர்ச்செய்கைகள் அழி வடைந்து வருகிறது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திலெடுத்து கால்நடைகளை கட்டுப்படுத்தித் தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (40)

## போக்குவரத்து கலந்துரையாடல்

காங்கேசன்துறை பொலிஸதிகாரி தலைமையில் நாளை மு.ப 10.00 மணிக்கு நடைபெறவுள்ள பிரதேச போக்குவரத்துச் சபையின் கூட்டத்திற்கு பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களை கலந்துகெள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. புத்தூரில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் பிரதேச போக்குவரத்து தொடர்பாக முக்கிய பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் சம்பந்தப்பட்வ்ர்களைக் கலந்து கொள்ளுமாறு கேடகப்பட்டுள்ளது. (03)

## புத்தகம் கட்டுநர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகிறது

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் புத்தகம் கட்டுநர் சேவையின் தரம் III பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.


விண்ணப்பதாரி 18-45 வயதுக்குட்பட்டவராகவும், இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடல், உள நலமுடையவராகவும், க.பொ.த (சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்தவரும், உயர் மற்றும் தொழிற்தகைமைகளும், புத்தகம் கட்டுதலில் ஒரு வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குட்பட்டதுமாகும் விண்ணப்பங்கள் 29.11.2013 இற்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையின் இடது மேல் மூலையில் புத்தக கட்டுநர் சேவையின் தரம் III பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணம் 750 ரூபாவாகும். சிங்களம் அல்லது தமிழ் மொழிமூலம் விண்ணப்பிக்கலாம். பாடவிதானம், வினாத்தாள், புத்தகம் கட்டுநர் பதவிக்கு சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான (பிரயோக) இரண்டு மணித்தியால பரீட்சையாகும்.

இதன் மேலதிக விபரங்களை அறிந்துகொள்ள 8.11. 2013 அரச வர்த்தக மானியை பார்வையிடலாம். (105)

# இரசாயன ஆயுதங்களை அழிக்க அல்பேனியா மறுப்பு




சிரியாவின் இரசாயன ஆயுதங்களை அழிக்க அல்பேனியா மறுப்புத் தெரிவித்துள்ளது.

சிரியாவில் கைப்பற்றப்பட்ட இரசாயன ஆயுதங்களை அழிக்கும் முயற்சியில் பிற நாடுகளின் உதவியை ஐ.நா நாடியுள்ளது. 1000 மெட்ரிக் தொன் எடை கொண்ட இந்த ஆயுதங்களில் கடுகு வாயு மற்றும் நரம்புகளை செயலிழக்கச் செய்யும் சரின் போன்ற வாயுக்களும் உள்ளன. இவற்றை வெளியில் வைத்து அழித்துவிடுமாறு சிரியா கேட்டுக் கொண்டதற்கிணங்க ஐ.நாவும் இந்த முயற்சியில் இறங்கியுள்ளது.

இரசாயன ஆயுத ஒழிப்பினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த அல்பேனிய அரசு நேற்று முன்தினம் இதனை மறுத்துள்ளது. நேற்று முன்தினம் வெளியிட்ட தொலைக்காட்சி உரையில் அல்பேனிய அரசின் பிரதமர் எடி ராமா அரசின் இந்த முடிவினைத் தெரிவித்தார்.

ஆயுதங்களைத் தங்கள் நாட்டில் ஒழிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதமரின் அலுவலகத்திற்கு முன்னால் கூடியிருந்த 2,000 ஆர்ப்பாட்டக்காரர்களும் அரசின் இந்த முடிவை ஆதரித்து உற்சாகக் கோஷம் எழுப்பினர். சிரியாவின் ஆயுதங்களை அழிக்கத் தேவையான கட்டமைப்பு அல்பேனியாவில் இல்லை.

எங்களுடைய சொந்த விஷங்களை சமாளிக்கத் தேவையான ஆயுதங்களே இங்கில்லை. மேலும்,இது குறித்து நேட்டோ, அமெரிக்கா போன்ற எவரின் உத்தரவையும் ஏற்க வேண்டிய கடமை இல்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர் ஒருவர் கூறினார்.

நேட்டோ அமைப்பில் ஒரு உறுப்பினராக உள்ள அல்பேனியா நாட்டைச் சேர்த்து இது வரை மொத்தம் மூன்று நாடுகளே தங்களின் இரசாயன ஆயுதங்களின் இருப்பைத் தெரிவித்து வெளிப்படையாக அழித்தன.அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளும் தங்களின் இரசாயன ஆயுதங்கள் கையிருப்பை வெளியில் தெரிவித்தபோதிலும் அவற்றை இன்னும் முற்றிலுமாக அழிக்கவில்லை.

# 69 அரசியல் கைதிகளை விடுவித்தது மியான்மர்



நீண்ட நாட்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்த 69 அரசியல் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவர்களை விடுதலை செய்யும்படி மியான்மர் அதிபர் தியன் செய்ன் உத்தரவிட்டார்.

இவர்களில் மியான்மரின் முன்னாள் சர்வாதிகாரி நெ வின்-னின் பேரர்கள் 2 பேரும் விடுதலை ஆனார்கள்.மியான்மரில் ஆட்சி கவிழ்ப்புக்கு சதி திட்டம் தீட்டியதாக இவர்கள் இருவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வந்தனர்.

விடுதலையான மீதி 67 கைதிகளும் அரசை எதிர்த்து அகிம்சை முறையில் போராடி கைதானவர்கள். தற்போது விடுதலை செய்யப்பட்ட கைதிகள் நீங்கலாக மேலும் 60க்கு மேற்பட்ட அரசியல் கைதிகள் மியான்மரில் உள்ள பல்வேறு சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# மூளைச்சாவு அடைந்த கர்ப்பிணிக்கு 3 மாதங்களுக்குப் பின் குழந்தை



மூளைச்சாவு அடைந்த பெண்ணின் வயிற்றில் இருந்த குழந்தையை 92 நாட்கள் வயிற்றிலேயே பத்திரமாக வைத்துபிரசவிக்கச் செய்து ஹங்கேரி மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

கிழக்கு ஹங்கேரியைச் சேர்ந்த 31 வயதுக் கர்ப்பிணிப்பெண் ஒருவருக்கு அவரது 15வது வார கர்ப்பகாலத்தில் மூளையில் திடீர் இரத்தப் பெருக்கு ஏற்பட்டது. உடனடியாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் மூளைச் சாவு அடைந்து விட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அவரது வயிற்றில் இருந்த கரு நன்கு ஆரோக்கியத்துடன் இருந்துள்ளது.

மேலும் அக்குழந்தை வெளி உலகிற்கு வரும் நிலையில் இல்லை என்பதால் தீவிர ஆலோசனைகளுக்குப் பிறகு அப்பெண்ணை இன்னும் சில வாரங்கள் அதே நிலையில் மருத்துவமனையில் வைத்துப் பாதுகாக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட அப்பெண்ணுக்கு தேவையான மருத்துவம் செய்யப்பட்டது. இதன்மூலம் அவரது வயிற்றில் இருந்த சிசு ஆரோக்கியமாக வளர்ந்தது.வயிற்றிலிருந்த சிசுவிற்கு 27 வாரங்கள் ஆனதும் அந்தக் குழந்தையை அறுவைச் சிகிச்சை மூலம் மருத்துவர்கள் வெளியே எடுத்தனர்.

கிட்டத்தட்ட 92 நாட்கள் உயிருடன் காப்பாற்றப்பட்ட அந்தப் பெண்ணின் இதயம், கணையம், கல்லீரல் மற்றும் இரண்டு சிறுநீரகங்கள் ஆகியவை நான்கு நோயாளிகளுக்கு உறுப்புத் தான முறையில் பொருத்தப்பட்டுள்ளது.பிறந்த ஆண் குழந்தையானது 1.42 கிலோகிராம் எடையுடன் நல்ல ஆரோக்கியத்துடனும் இருந்தது என்றும் தற்போது அக்குழந்தை குடும்பத்தினரிடம் வளர்ந்து வருவதாகவும் டெப்ரீசன் பல்கலைக்கழகத்தின் மருத்துவ அறிவியல் மையத்தின் தலைவரான பெலா புரேடி சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் ஹங்கேரி சட்டத்தின்படி உறுப்பு தான விடயங்கள் பாதுகாக்கப்படும் என்பதால் அந்தக் குடும்பத்தினர் பற்றிய விபரங்களை வெளியிட மருத்துவர்கள் மறுத்துவிட்டனர்.

# தாக்குதல் நடத்தியவரை கண்டுபிடித்தால் ஒரு கோடி டொலர் பரிசு

லிபியாவில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது தாக்குதல் நடத்தியது யார் என கண்டுபிடித்து கூறினால், ஒரு கோடி டொலர் பரிசு தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 11.9.2012 அன்று லிபியாவின் பென்காசி நகரில் உள்ள அமெரிக்க் தூதரகம் மற்றும் அமெரிக்க உளவுப்படையான சி.ஐ.ஏ. அலுவலகம் ஆகியவற்றின் மீது ராக்கெட்களை ஏவியும், மோட்டார் குண்டுகளை வீசியும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அமெரிக்க தூதர் உட்பட 4 பேர் பலியாகினர். இச்சம்பவம் தொடர்பாக லிபியாவின் இரகசிய பொலிஸாரும் அமெரிக்காவின் எப்.பி.ஐ. உளவாளிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஆனால், தாக்குதலை நடத்தியவர்கள் யார்? என்பது தொடர்பாக எவ்வித தகவலும் கிடைக்காததால் விசாரணையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த தாக்குதல் தொடர்பான விசாரணைக்கு உதவும் வகையில் தகவல் அளிப்பவர்களுக்கு 1 கோடி டொலர்களை பரிசாக வழங்குவதாக அமெரிக்க வெளியுறவு துறை செய்தி தொடர்பாளர் அறிவித்துள்ளார்.

# கருத்துக்கணிப்புக்கு தடை தேர்தல் ஆணையம் பரிந்துரை

(புதுடில்லி)

தேர்தல் கருத்து கணிப்புகளுக்கு தடை விதிப்பதற்கு பெரும்பாலான கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. இதையடுத்து, கருத்துக்கணிப்புக்கு தடை விதிக்கக் கோரி, மத்திய அரசுக்கு, தலைமை தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்துள்ளது.

தேர்தல் கருத்துக் கணிப்புகளுக்கு தடை விதிக்க வேண்டும் என, காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. ஆனால், தேர்தல் கருத்து கணிப்புகளுக்கு தடை விதிக்க, பா.ஜ.க.எதிர்ப்புத்தெரிவித்துவருகிறது. இதுதொடர்பாக, தேர்தல் ஆணையத்தின் ஆலோசனையை மத்திய அரசு கோரியிருந்தது. தேர்தல் ஆணையமும், அரசியல் கட்சிகளின் கருத்தை கேட்டிருந்தது. கருத்துக கணிப்புக்கு தடை விதிக்க, பகுஜன்சமாஜ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன.

தேர்தல் தொடர்பாக, அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து, அனைத்து தொகுதிகளிலும், ஓட்டுப் பதிவு முடிந்து, அரை மணி நேரம் வரையில், கருத்துக்கணிப்புகளை வெளியிட தடை விதிக்க வேண்டும் என, கட்சிகள் தெரிவித்திருந்தன. சரத் பவாரின், தேசியவாத காங்கிரஸ் கட்சியும், கருத்துக் கணிப்புக்கு தடை விதிக்க கோரியிருந்தது. பெரும்பாலான கட்சிகள் தடை விதிக்க ஆதரவு தெரிவித்து இருநததால், அதன் அடிப்படையில் தலைமை தேர்தல் ஆணையம் மத்திய அரசுக்கு அளித்த அறிகையில், கருத்து கணிப்புகளுக்கு தடை விதிக்க பரிந்துரை செய்துள்ளது. இதன்படி, தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து, ஓட்டுப்பதிவு முடியும் வரை கருத்து கணிப்புகளுக்கு தடை விதிக்கலாம் என, தேர்தல் ஆணையம் பரிந்துரை செய்துள்ளதாக கூறப்படுகிறது. தேர்தல் ஆணையத்தின், இந்த பரிந்துரையை அடுத்து, மத்திய அரசு அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்டி ஆலோசிக்கும் என தெரிகிறது.

# பெட்டி பெட்டியாக பணம் அனுப்பி வியப்பில் ஆழ்த்திய மணமகன்

சீனாவை சேர்ந்த நபூர் ஒருவர், தனது வருங்கால மனைவிக்கு கோரீடிக்கணக்கில் பணத்தை அனுப்பி வைத்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் தொழில்வளம் மிகுந்த பகுதியாக உருவாகி வரும் ஹங்காயில், திருமணங்கள் மிக ஆடம்பரமான முறையில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் மணமகன் ஒருவர், தனது வருங்கால மனைவிக்கு பெட்டி பெட்டியாக பணம் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த பணத்தை 18 பேர் மூங்கில் கூடைகள், பெட்டிகளில் சுமந்து சென்றனர்.

102 கிலோ ரூபாவாகும் எடை கொண்ட இந்த சீதன பணத்தின் மொத்த மதிப்பு 90 கோடி ரூபா ஆகும்.

இந்த காட்சி இணையத்தளத்தில் வெளியாகி ஆதரவையும், எதிர்ப்பையும் சம்பாதித்துள்ளது.

# ஒரு குழந்தை திட்டத்தை தளர்த்துகிறது சீனா



சீன அரசு தனது ஒரு குழந்தைத் திட்டத்தைத் தளர்த்துவதாக நேற்று அறிவித்துள்ளது. அது மட்டுமின்றி, அந்நாட்டில் மனித உரிமை முயற்சியை மேம்படுத்தும் விதமாக நடைபெற்று வரும் தொழிலாளர் முகாம்களும் ஒழிக்கப்படுவதாக அந்நாட்டின் அரச செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இந்த வாரம் நடைபெற்ற கம்யுனிசத் தலைவர்களின் உயர்மட்டக் குழுக் கூட்டத்திற்குப் பிறகு இந்தக் கொள்கை மாற்றம் குறித்து அறிவிக்கப்பட்டது.

குடும்பத் திட்ட விதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்தின் மூலம், பெற்றோரில் ஒருவர் ஒரு குழந்தையாக இருக்கும்பட்சத்தில் அவர்கள் இரண்டாவது குழந்தையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது குழு என்று அழைக்கப்பட்ட உயர் மட்டத் தலைவர்கள் பங்குபெற்ற இந்த வாரத்தைய கலந்தாய்வில் எடுக்கப்பட்ட மிக முக்கியமான முடிவு இது என்று அரச செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

உலகச் செய்திகள்

தொழிலாளர் முகாம்களை ஒழிப்பதுவும் சீன அரசில் நடைபெற்றுள்ள மிகப் பெரிய மாற்றமாகக் கருதப்படுகின்றது. இந்த அமைப்பின்மூலம் ஆயிரக்கணக்கானோர் வேலை மூலம் மறுகல்வி என்ற பெயரில் விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டது முடிவிற்கு வருகின்றது. கடந்த 1950 ஆம் ஆண்டில் சோவியத் ரஷ்யாவை மாதிரியாகக் கொண்டு இந்த அமைப்பு மாவோ சே துங்கினால் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 2008 ஆம் ஆண்டில் இதுபோன்ற 350 முகாம்களில் 1,60,000 பேர் சிறை வைக்கப்பட்டுள்ளதாக நீதித்துறை அமைப்பு தெரிவித்திருந்தது.

# வட இந்து ஆரம்பப் பாடசாலையின் வளப்பற்றாக்குறையை நிவர்த்திசெய்க

## - அதிகாரிகளிடம் தரம் 4 மாணவி கோரிக்கை -



கல்விச் செயற்பாடுகள் யாவற்றிலும் எமது பாடசாலை மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றபோதிலும் உடற்பயிற்சி செய்வதற்கு ஆடியோடி விளையாடுவதற்கு முற்றம் இட்டுமுட்டாக காணப்படுகின்றது. விளையாட்டுப் போட்டி வைப்பதற்கும் எமக்கென ஒரு மைதானம் இல்லை. இதற்கு சிறந்த பரந்ததொரு மைதானத்தில் உருண்டு புரண்டோடி விளையாடவேண்டும்.

சறுக்கீசும் ஊஞ்சலும் பாலமும் சுழன்றாடும் இராட்டினமும் இளைப்பாற நிழற்குடையும் வேண்டும். எமது விருப்பத்துக்குரிய பாடவேளையில் கணனிக்கூடம் சென்று கணனி அறிவை வளர்க்க கணனிகூடம் வேண்டும்.

நல்ல காற்றோட்டம், வெளிச்சத்துடன் நெருக்கடியின்றி கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வகுப்பறைகள் தேவை. அத்துடன் வாசிப்பதால் மனிதன் பூரணத்துவமடைகின்றான் என்ற வாசகத்துக்கிணங்க அறிவை வளர்க்க நூலகம் வேண்டும்.

நாம் அனைவரும் கூடி விழாக்களை களிப்புடன் நடத்தவும் பிரார்த்தனை மண்டபம் வேண்டும். இவ்வாறு தேவையான வளங்கள் நிரம்பப் பெறும் இடத்து வடமராட்சியில் எமது பாடசாலை வெள்ளிடை மலையாக மிளிரும்.

எனவே எமது சின்னஞ்சிறு ஆசை நிறைவேற கல்விமான்களாகிய உங்களையும் ஆண்டவனையும் பிரார்த்திப்பதாக பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலையின் மேலதிக வளப்பற்றாக்குறையை பரிசில்தின நிகழ்வில் மேடையேறி சுட்டிக்காட்டிய தரம் 4 இல் கல்வி கற்கும் மாணவி வ.அபிஷாவின் பேச்சு அனைவரையும் ஈர்த்தது.

வட இந்து ஆரம்பப் பாடசாலையின் மண்டபத்தில் அதிபர் த.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின் போதே மாணவி இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், முன்னாள் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரகுநாதன், பல்கலைக்கழக ஓய்வுநிலை வாழ்நாள் பேராசிரியர் எஸ்.நடராஜசுந்தரம் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர். (116)

# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

அரச தனியார், வெளிநாட்டு கூட்டுறவுத் துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெறும் பொருட்டும் தொழில் தருநர்களால் எதிர்பார்க்கப்படும் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ்களைப் பெறும் பொருட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் பெறுதற்கான கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தொழிற் பயிற்சி அதிகாரசபையினால் கோரப்பட்டுள்ளது.

பாலி நகரில் தகவல் தொழில்நுட்பம், தையற்கலை, வீட்டு மின்னிணைப்பு ஆகிய கற்கைநெறிகளும் முல்லையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், கணனி வன்பொருள் தொழில்நுட்பம், பெண்களுக்கான அழகுக்கலை, சிகை அலங்காரம், தையற்கலை, முச்சக்கரவண்டி திருத்துநர், அலுமினிய கட்டுமானம், வீட்டு மின்னிணைப்பு, நீர்க்குழாய் பொருத்துநர் போன்ற கற்கைநெறிகளும், ஒட்டுசுட்டானில் தகவல் தொழில்நுட்பம், தையற்கலை ஆகிய கற்கைநெறிகளும் ஆரம்பமாகவுள்ளன.

கற்கைநெறிகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் வலுவூட்டலுடன் சிறப்பாக நடைபெறவுள்ளதால் ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் உதவிப் பணிப்பாளர், மாவட்ட தொழில்பயிற்சி நிலையம், மாங்குள வீதி, முல்லைத்தீவு எனும் முகவரிக்கு தபால் மூலமோ நேரிலோ தங்களது பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை வழங்குவதன் மூலம் இணைந்து கொள்ள லாம்.

அல்லது 071- 0318989, 071 - 1213378 ஆகிய இலக்கங்களுக்கு குறுந்தகவல் அனுப்புவதன் மூலமும் பதிவுகள் செய்யமுடியும். (இ)

## தமிழரின்...

கமரூன் கண்டுகொள்ளாது சென்றாலும் அவர்களது போராட்டத்திற்கு அது ஏமாற்றமும் பின்னடைவுமே தவிர பிரயோசனமில்லை என்று சொல்லமுடியாது.

பிரித்தானியப் பிரதமர் இந்த காணாமற்போனவர்களது உறவுகளின் போராட்டத்தை பார்வையிடாது சென்றாலும் அந்தப் போராட்டம் இன்று சர்வதேச ரீதியாக மிகப்பெரிய பிரசாரத்தை ஏற்படுத்தியுள்ளது.

வலி.வடக்கு மக்களின் போராட்டமும் இந்தப் போராட்டத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படுமேயானால் அது மிகப்பெரிய வெற்றியைத் தந்திருக்கும்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் எமது போராட்டங்களையும் அதன் வெற்றியையும் தகர்த்து வருகின்றது.

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டினை புறக்கணித்த மூன்று நாடுகளுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். கனடா, இந்தியா, மொரீசியஸ் நாடுகளின் பிரதமர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளாமை தமிழ்மக்களுக்கு சாதகமான விடயமாக மாறியிருக்கின்றது.

கனடாவில் கணிசமான அளவு புலம்பெயர் தமிழர்கள் வாழ்ந்துவருவதும், இந்தியாவில் தமிழக மக்களின் எதிர்ப்பும் மொரீசியஸ் நாட்டில் வாழும் 10 வீதமான தமிழர்கள் அதாவது தமிழ் தெரியாத பத்து வீத தமிழர்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியதே இந்த மூன்று நாடுகளும் இந்த மாநாட்டை புறக்கணித்து அவற்றின் பிரதமர்கள் வருகைதராது தவிர்த்துள்ளனர்.

எனவே தமிழர்களின் அரசியல் போராட்டம் இவ்வாறு மாற்றமடைந்து செல்வதாகவும் அவர்களது கரங்களை தமிழ்மக்கள் இறுகப் பற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (பா)

## சர்வதேச...

கொடுத்துள்ளோம்.

காணாமல் போனோர் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ள ஆணைக்குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது. விசாரணைகள் மேற்கொள்ள திறமை மிக்க பக்க சார்பற்ற அதிகாரிகள் எமது நாட்டில் உள்ளனர். இந்த ஆணைக்குழுவுக்கு எவரும் முறைப்பாடுகளை முன்வைக்க முடியும்

ஆனால் காணாமல் போனோர் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பவர்களில் சிலர் இந்த நாட்டில் இல்லை. இன்னும் சிலருக்கு இலங்கையில் பிரஜா உரிமை கூடஇல்லை.

ஒரு பக்க நியாயத்தை மட்டும் கவனத்தில் கொள்ளாதீர்கள். மறுபக்க நியாயத்தையும் எமது அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மனிதக் கேடயங்களாக புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட மூன்று லட்சம் மக்களை எமது படையினர் மீட்டனர். அவர்களுக்கு தற்காலிக தங்குமிடம் மற்றும் உணவுகள் வழங்கிப் பாதுகாத்ததோம். இன்று அவர்களை அவர்களை சொந்த இடங்களில் மீள் குடியேற்றம் செய்துள்ளோம்.

வடக்கின் அபிவிருத்தி வேகம் 22 சதவீதத்தையும் தாண்டியுள்ளது. 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வடக்கு அபிவிருத்திக்காக செலவிடப்படுகின்றது.

30 வருட கால பயங்கரவாத நடவடிக்கைகளை நாம் துடைத்தெறிந்தோம். இது ஒரு குற்றச் செயலா? நாட்டில் புலிகள் அராஜகம் புரிந்த காலத்தில் எந்த ஊடகமும் தமிழ் மக்களின் நலன்களைப் பற்றி வாய்திறக்காதிருந்ததேன்?

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுடன் நான் சினேகபூர்வமாக பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர் வடபகுதிக்குச் சென்றதை பெரிதும் வரவேற்கிறேன் என்றும் ஜனாதிபதி கூறினார்.

## சுயாதீன....

வேண்டியது அவசியமானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக்கு வருகை தந்திருந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் நேற்று பகல் 1.00 மணியளவில் தாய்நாடு திரும்பினார் .

பிரித்தானிய விசேட விமானமொன்றிலேயே பிரித்தானிய பிரதமரும் அவரது குழுவினரும் தாய்நாடு திரும்பியுள்ளனர்.

## உருளைக்கிழங்கு...

25 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோகிராம் சின்ன வெங்காயம் மீது விதிக்கப்பட்டிருந்த 15 ரூபா வரி 10 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சிறு போகத்தின் போது, உள்நாட்டில் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்கு பெரிய வெங்காயம் மற்றும் சின்ன வெங்காயம் ஆகியவற்றை சந்தைக்கு விநியோகிக்கும் நடவடிக்கை ஏற்கனவே நிறைவு பெற்றுள்ளது.

இந்த நிலையில் எதிர்வரும் பண்டிகை காலத்தில் நியாயமான விலையில் நுகர்வோருக்கு இவற்றைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் வரிச்சலுகையை வழங்குமாறு ஜனாதிபதி திறைசேரிக்கு பணிப்புரை விடுத்ததை அடுத்து இந்த இறக்குமதித் தீர்வை குறைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை மீதான...

மாநாட்டுக்கு அழைத்திருந்தாலும் அவர் வழங்கிய ஆலோசனைகளுக்கு நன்றி.

எனினும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க நாட்டிற்குள் புத்திசாலி மக்கள் இருக்கின்றனர். இலங்கை ஒரு சுதந்திரமான நாடு. இதனை மிக தெளிவாக நாங்கள் தெரிவிக்க வேண்டும். எமக்கு சிறந்த கல்வியறிவு இருக்கின்றது.

சிறந்த அனுபவம் இருக்கின்றது. அத்துடன் 2500 ஆண்டுகள் சிறந்த வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. எமது பிரச்சினைகளை எம்மால் தீர்த்து கொள்ள முடியும்.

கமரூன் துரை அவர்களை நாங்கள் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கே அழைத்தோம். அவர் எமது வீட்டுக்கு வந்தால் அவர் எமது உபசரிப்பை அனுபவித்து விட்டு கௌவரமாக சென்றால் நல்லது.

என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பில் எமக்கு ஆலோசனை வழங்குவதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்கிறோம். எனினும் நாங்கள் ஆலோசனைகளை பெற எமக்கு நாடொன்று உள்ளது.

நாட்டில் குடிமக்கள் உள்ளனர். குடிமக்கள் தெரிவு செய்த அரசாங்கம் உள்ளது. நாட்டில் உள்ள சட்ட கட்டமைப்பின்படி செயற்பட எமக்கு போதுமான அனுபவங்கள் உள்ளன என்றார்.

## வரலாற்று...

தமிழ் மக்களுக்கு வெறும் உணர்ச்சியை ஊட்டும் அரசியல் பாதையினையே தமிழ் அரசியல்வாதிகளும், அவர்களுக்குப் பின்னால் தூண்டு சக்திகளாக இருப்பவர்களும் முன்னெடுத்து வருகின்றார்கள்.

துரதிஷ்டவசமாக தமிழ் மக்களும் அதற்கு எடுபட்டு விடுகின்றனர். இந்த நிலையை தமிழ் மக்களின் ஏகோபித்த நிலைப்பாடாக எவரும் எண்ணிவிடக்கூடாது. தமிழ் மக்கள் வழங்கிய ஆணைகளும், அதனால் கிடைக்கப்பெற்ற அரசியல் அதிகாரங்களும் கடந்த காலங்களில் வீணடிக்கப்பட்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் வன்முறையற்ற அரசியல் வழிமுறையினூடாக தமது அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்காகவும், இலங்கையின் ஏனைய இன மக்களுடன் இணக்கமாக வாழ்வதற்கான விருப்பத்துடனும் இருக்கின்றார்கள் என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு, தமிழ் மக்களின் அரசியல் தளத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகலரினதும் கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து தமது அணுகுமுறையை கடைப்பிடிக்கவேண்டும்.

தமிழ் மக்களை அரசியல் மௌனிகளாக்கி அரசியல் வழிகாட்டலில் அழைத்துச் சென்றவர்கள் தமிழ் மக்களுக்கு அழிவைத் தவிர வேறு எதையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

இந்த வரலாற்று உண்மையை புரிந்துகொண்டு இனிமேலாவது சர்வதேச சமூகத்தினர், இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுகுவதே பயனுடையதாக இருக்கும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

## மாற்றங்களை...

பதிலளித்தபோது இந்தக் கருத்தினை தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்துகொள்ளாமை, முழுமையான விசாரணையை பிரித்தானிய பிரதமர் கோரியுள்ளமை, உயிர்வாழும் சுதந்திரத்தை பாதுகாத்திருப்பதாக இலங்கை ஜனாதிபதி கூறியுள்ளமை போன்ற விடயங்கள் தொடர்பில் சல்மான் குர்ஷித்திடம் தமது செய்தியாளர் கேள்வியெழுப்பியதாக பி.பி.சி. தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியப் பிரதமர் கலந்துகொள்ளாமையை பொதுநலவாய மாநாட்டை புறக்கணிப்பதாக கருதக்கூடாது என்றும் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் முடிவுற்ற பின்னர் முன்னெடுக்கப்பட்டுள்ள முன்னேற்ற நடவடிக்கைகள் பற்றி இந்தியா அறிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனுபவங்களைப் பெறப் பெற இலங்கை முன்னேற்றத்தைக் காட்டும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பதிலளித்துள்ளார்.

# அதிகாரப்பகிர்வு முரண்பாட்டிற்கு புரிந்துணர்வு இன்மையே காரணம்

## நியூஸிலாந்து தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான முரண்பாடுகளுக்கு மத்திய அரசாங்கத்திற்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான சிறந்த புரிந்துணர்வு இன்மையே காரணமென நியூஸிலாந்து தெரிவித்துள்ளது இது தொடர்பாக அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் மரேமக்கலே தெரிவித்துள்ளதாவது.

வடக்கில் இராணுவ பிரசன்னம் தொடர்பாக கவனம் செலுத்தப்படவேண்டியது-அவசியமானதாகும். அரசாங்கத்தின் நல்லிணக்கமுனைப்புக்களை நியூசிலாந்து முழுமையாக ஆதரிக்கவில்லை வடபகுதிமக்களுக்கு உதவிகளை வழங்க எமது அரசாங்கம் விருப்பம் கொண்டுள்ளது.

எனினும் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டிய அவசியமில்லை. யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகளுக்கு ஆதரவளிக்க வேண்டியதில்லை என்பதே நியூசிலாந்தின் நிலைப்பாடு பால் உற்பத்தி இறக்குமதிகள் தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் என்ற அச்சத்தினால் இலங்கை தொடர்பில் நியூசிலாந்து மெத்தனப் போக்கைப் பின்பற்றி வருவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை யுத்தத்தின் பின்னர் சாதகமான மாற்றங்கள் இலங்கையில் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# பிழையாக வழிநடத்தப்படும் பிரிட்டன் பிரதமர் கமரூன்

## என்கிறார் முரளி



பிரித்தானிய பிரதமரை சிலர் பிழையாக வழிநடத்தி வருவதாக இலங்கை கிரிக்கட் அணியின் முன்னாள் நட்சத்திர கிரிக்கட் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு நிலைமைகளை நேரில் பார்வையிடாது சிலரது கருத்துக்களை வெளியிட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். வடக்கு கிழக்கு நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை நேரில் பார்வையிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய பிரதமர் சரி அல்லது பிழை என தமக்கு குறிப்பிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பிரதமர் கமரூன் ஒரு நாள் மட்டுமே வடக்கிற்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# ஒருநாள் தொடர் சமநிலையில் நிறைவு

(தம்புள்ள)



இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று தம்புள்ளவில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் களமிறங்கிய இலங்கை ஆடியவேளை மழை காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டது. பின்னர் 33 ஓவர்களாக கொண்ட போட்டியாக மாற்றப்பட்டது. இதற்கமைய தொடர்ந்து ஆடிய இலங்கை அணி 33 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டில்சான் 53, மஹேல ஜெயவர்த்தன46, திரிமன்ன 23, சேனாநாயக்க 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நதன் மக்கலம் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 33 ஓவர்களில் 219 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூசிலாந்து அணி, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றவேளை மீண்டும் மழை குறுக்கிட்டதால் போட்டி கைவிடப்பட்டதுடன் டக்வேர்த் லூயிஸ் முறைப்படி இலங்கை அணி 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதில் நிஷாம் 42, நதன் மக்கலம் 35 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் மூன்று, சேனாநாயக்க இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் சமநிலையில் நிறைவுற்றது.

# பெண்ணை கத்தியால் குத்தியவர் வாள்வெட்டிற்கு இலக்கானார்

யாழ்.புன்னாலைக்கட்டுவான் ஈவினைப் பகுதியில் பெண் ஒருவரை கத்தியால் குத்தியவர் இனந்தெரியாதவர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகிதெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது .

புன்னாலைக்கட்டுவன் பிரதேசத்தினைச் சேர்ந்த சசிதரன் ராதிகா (வயது-32) என்பவரது கணவரை நேற்று முன்தினம் நண்பகல் நபர் ஒருவர் தாக்கியுள்ளார்.

கணவனை ஏன் தாக்கினாய் எனக் கேட்கச் சென்ற மனைவி மீது குறிப்பிட்ட நபர் கத்தியால் குத்தியுள்ளார். இதனால் படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். இந்த நிலையில், இனந்தெரியாத நபர்கள் சிலர் நேற்று முன்தினம் இரவு குறித்த பெண்ணை கத்தியால் குத்திய நபரை வாளால் வெட்டியுள்ளனர். இதில் படுகாயமடைந்த அந்த நபர் தற்போது தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# போர் முடிவடைந்த பின்னரும் தொடரும் இராணுவமயமாக்கல்

## கூறுகிறது பி.பி.சி.

(கொழும்பு)

இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் அங்கு சகல இடங்களும் இராணுவ மயப்படுத்தப்பட்டு வருவதாக பி.பி.சி வெளியிட்டுள்ள செய்தித தொகுப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்தித் தொகுப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் சகல இடங்களிலும் இராணுவம் நிலைகொள்ள வைக்கப்பட்டுள்ளது, இலங்கைவாழ் தமிழர்களின் உரிமைகள் நசுக்கப்படுகின்றன.

போர் முடிந்த பின்னரும் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகள் மேலும் மேலும் இராணுவயமயப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனைத் தவிர அரசாங்கத்தின் முக்கிய பதவிகளில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வர்த்தகம், சுற்றுலாத் துறை, காய்கறி வர்த்தகம் முதல் சகலவற்றிலும் இராணுவத்தின் பிரசன்னம் இருக்கின்றது.

சில குழுக்கள் பௌத்த மதத்தை பயன்படுத்தி வன்முறைகளையும், இனவாதத்தையும் தூண்டி வருகின்றன.

எனினும் இதனை அரசாங்கம் கண்டிப்பதில்லை என்பதால் அதன் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இலங்கைக்கு எதிரான அவதூறு புலிகளின் நிதி உதவியே காரணம்

## தூதுவர் கிறிஸ்நோனிஸ் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிதி உதவிகளை பெறுபவர்களால், இலங்கைக்கு எதிராக வார்த்தைப் போர் ஒன்று முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கிறிஸ் நோனிஸ் தெரிவித்துளளார்.

சீ.என்.என். இணையத்தளத்துக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை காரணம் காட்டி, இங்கு நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை, கனடா, மொரீசியஸ் போன்ற நாடுகள் புறக்கணித்துள்ளன.

எனினும் இலங்கை மீதான விமர்சனங்கள் தொடர்பில் வருத்தம் கொள்ளவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுகள், போராட்டங்கள் மற்றும் விமர்சனங்களில், விடுதலைப் புலிகளிடம் இருந்து நிதி பெறும் குழுக்கள் அதிக ஆதிக்கத்தை செலுத்துகின்றன.

எனினும் இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மீளமைப்பு, மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு நடவடிக்கைகளை மக்கள் புரிந்து கொண்டதைப் போல, சர்வதேச நாடுகளும் புரிந்து கொள்ளவேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

# மாநாட்டின் பின்னரான பலன் அரசின் செயலிலேயே உள்ளது

## என்கிறது ஐ.தே.க

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டிற்கு பின்னர் நாடு பலன் தரும் பிரயோசனங்களை பெற வேண்டும் என்றால், நாடு கைச்யெழுத்திட்டுள்ள இணக்கப்பாடுகளின் அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,


மனித உரிமைகளை பாதுகாத்தல், நீதித்துறையின் சுதந்திரம், ஊடக சுதந்திரம் உட்பட பல இணக்கப்பாடுகளில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

இவற்றை புறந்தள்ளி விட்டு தொடர்ந்தும் செயற்பட்டால் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தியதன் மூலம் கிடைக்கக் கூடிய எந்த பிரயோசனமும் கிடைக்காது.

பல பில்லியன் ரூபா பணத்தை செலவிட்டு அரசாங்கம் நடத்தி வரும் இந்த மாநாட்டின் மூலம் உரிய பலனை பெறுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளதாகத்தெரியவில்லை.

அரசாங்கம் தொடர்ந்தும் ஒரு தலைப்பட்சமாக செயற்பட்டால் மாநாட்டின் பின்னர் மேலும் பல பிரச்சினைகளை நாடு சந்திக்க நேரிடும் எனத்தெரிவித்தார்.

# இருபது வருடங்களுக்குப்பின் வீமன்காமத்தில் மீன் சந்தை



கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இயங்காது இருந்த தெல்லிப்பளை வீமன்காமம் மீன்சந்தை நேற்று முதல் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது .

வலி வடக்கு பிரதேச சபைக்கு சொந்தமான குறிப்பிட்ட சந்தைப் பகுதியில் எற்கனவே மரக்கறிச் சந்தை இயங்கி வந்த நிலையில் தற்போது மீன் சந்தையும் புதிய கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் இந்தப் புகுதியில் உள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வது சுலபமாகியுள்ளது .வெகு விரைவில் மககளின் நன்மை கருதி இந்தச்சந்தையில் ஆட்டிறைச்சிக் கடையும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்பு வந்த 15 இற்கும் மேற்பட்ட கொமன்வெல்த் பிரதிநிதிகளுக்கு சுகவீனம்

கொமன்வெல்த் மாநாட்டின் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக கொழும்பு வந்துள்ள, 15இற்கும் அதிகமான வெளிநாட்டு பிரதிநிதிகள் சுகவீனமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கொமன்வெல்த் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சிறப்பு அலகு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அங்கு நேற்றுமுன்தினம் வரை 15இற்கும் அதிகமான் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு பல்வேறு நோய்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளனர். பலரும்சிறியளவு பாதிப்புகளுடன் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர்.

எனினும் ஒருவர், கட்டண விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றுக் கொண்டு நேற்றுமுன்தினம்காலை வெளியேறியுள்ளார்.

மற்றொரு பிரதிநிதி மலேரியா நோயால் பாதிக்கப்பட்டு தொற்று நொய் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையே கொமன்வெல்த் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு சேவையாற்றுவதற்காக 200 மருத்துவர்கள் மற்றும் 70 நோயாளர் காவு வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.